தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் : 34

விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி - II

VIRUDHUNAGAR DISTRICT INSCRIPTIONS

VOLUME - II

விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி - 2

பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்** இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

பொ. இராசேந்திரன்

முனைவர் சொ.சாந்தலிங்கம்

சொ. சந்திரவாணன்

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

சென்னை - 600 008.

2009

BIBLIOGRAPHICAL DATA

Title	:	VIRUDHUNAGAR MAVATTAK KALVETTUKAL
Genral Editor	:	Dr. T.S. SRIDHAR, I.A.S.,
Copy right	:	T.N. State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	207
Year	:	2009
Type point	:	11 Pt
No.of Pages	:	198 pages
Paper Used	:	80gsm
Typesetter	:	Pavai Printers (P) Ltd., #6 (142), Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph : 28482441, 28482973.
Printer	:	Department of Archaeology
Publisher	:	State Dept. of Archaeology Tamil Valarchi Valaagam Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 155/-

முன் அட்டை : அ.மி. நின்ற நாராயணப் பெருமாள் திருமேனி திருத்தங்கல்

பின் அட்டை : த. மானகச்சேரி கல்வெட்டு

அட்டைப்படவடிவமைப்பு : தே. சத்தியவதி அச்சுக்கோர்ப்பாளர்

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை 'கல்வெட்டு முனைப்புத் திட்டம்' என்னும் பெயரில் கடந்த 2004ம் ஆண்டு செப்டம்பர் முதல் தீவிர களப்பணிகள் மேற்கொண்டு பல ஆயிரம் கல்வெட்டுகளைப் படி எடுத்துள்ளது. பல கல்வெட்டுகள் உடனுக்குடன் படிக்கப்பட்டு மாவட்டக் கல்வெட்டுகள் வரிசையில் வெளியிடப்பட்டு வருகின்றன. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதி ஏற்கனவே வெளிவந்துள்ளது. தற்போது சிவகாசி, இராசபாளையம் வட்டங்களைச் சேர்ந்த கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியாக வெளிவருகின்றன.

இத்தொகுதியில் சிவகாசி வட்டத்திலுள்ள திருத்தங்கல், இராசபாளையம் வட்டத்திலுள்ள சோழபுரம் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் கணிசமாக இடம்பெற்றுள்ளன. இவை இவ்வட்டாரத்தின் அரசியல், சமூகப் பொருளியல் நிலைகளை அறிந்து கொள்ளப் பெரிதும் துணை புரிகின்றன. திருத்தங்கல் கோயிலை நிருவகித்த 'மூலபருஷை' என்னும் பிராமணர் சபை தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மட்டும் செயல்பட்டு வந்த குறிப்பிடத்தக்க சபையாகும். இதுபோல தடங்கண்ணிச் சிற்றூருடையான் குருகுலத்தரையன் என்னும் இப்பகுதியின் அதிகாரி கி.பி.13ம் நூற்றாண்டில் இப்பகுதியில் வரலாற்றோடு பின்னிப்பிணைந்துள்ளவன். அவனது பங்களிப்புப் பற்றிய செய்திகளும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு பல அரிய செய்திகளை உள்ளடக்கிய இக் கல்வெட்டுத் தொகுதி தொல்லியல் துறையின் மற்றொரு முக்கியக் கொடையாக வெளிவருகிறது.

இக்கல்வெட்டுகளைப் படி எடுத்துப் படித்து வெளியிடுவதில் முக்கிய பணி ஆற்றியவர்கள் திரு.பொ.இராசேந்திரன், முனைவர் சொ.சாந்தலிங்கம், திரு.சொ.சந்திரவாணன் ஆகியோர் ஆவர். இவர்களது உழைப்பையும், நன்முயற்சிகளையும் பாராட்டுகிறேன். இத்தொகுதியைப் பதிப்பித்து வெளிக் கொணரும் பணியில் முழுமையான ஈடுபாடுகாட்டி உழைத்தவர் கல்வெட்டாய்வாளர் (முதுநிலை) திருமதி. அர.வசந்தகல்யாணி அவர்கள். அவர்களது ஆக்கபூர்வமான பணிகளுக்கும் எனது பாராட்டுதல்கள் உரியவை. மேலும் களப்பணியின் போது எம்துறை அலுவலர்களுக்கு பலவற்றிலும் ஒத்துழைப்பு நல்கிய திருத்தங்கல் திரு.இரா.பாலச்சந்திரன், தொல்லியர் ஆர்வலர் அவர்களுக்கும் எனது நன்றி.

எம் துறையின் முந்தைய வெளியீடுகளைப் போல இவ்வெளியீடும் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும் அரிய சான்றாவணமாகப் பயன்படும் என்பதில் ஐயமில்லை. தமிழகம் இவ்வெளியீட்டை மனமுவந்து ஏற்று வாழ்த்தும் என்பது என் நம்பிக்கை.

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம)ஆணையர்

சென்னை - 8
நாள் : 26.02.2009

முன்னுரை

விருதுநகர் மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து கல்வெட்டு தீவிர முனைப்புத்திட்டத்தின் கீழ் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டுகளில், அருப்புக்கோட்டை, திருச்சுழியல், காரியாபட்டி, விருதுநகர், சாத்தூர் வட்டங்களிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களை உள்ளடக்கியதாக விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுக்கள் முதல் தொகுதி இத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது. இத்தொகுதியின் தொடர்ச்சியாக விருதுநகர், சிவகாசி, இராசபாளையம் வட்டங்களிலிருந்து படித்தறியப்பட்ட கல்வெட்டுக்களை உள்ளடக்கியதாக இரண்டாம் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள, அரசியல், சமுதாய, பொருளாதார, சமய, கலை நிகழ்வுகளை அறியத்தக்க பல செய்திகளைத் தெரிவிப்பனவாக இக்கல்வெட்டுகள் விளங்குகின்றன.

சோரம்பட்டி

திருத்தங்கல்லிலிருந்து வடமலாபுரம் செல்லும் சாலையில் 8 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். சோரம்பட்டி கிராமத்தில் முத்துலிங்காபுரம் செல்லும் சாலையிலமைந்துள்ள சிவாலயத்தில் நினைவுக்கல்லொன்றுள்ளது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் எடுப்பிக்கப்பட்டுள்ள இந்நினைவுக்கல், கருநிலக்குடி நாட்டிலமைந்திருந்த திசைசுடர்மணிமங்கலத்தைச் சேர்ந்த குடியன் குறிச்சான் என்ற வீரனின் நினைவாக எடுப்பிக்கப்பட்டுள்ளது.

காரிசேரி

திருத்தங்கல்லிலிருந்து வடமலாபுரம் செல்லும் சாலையில் சுமார் 9.00 கி.மீ தொலைவில் உள்ளது. சோரம்பட்டியிலிருந்து $^{1/2}$ கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரிலுள்ள இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயிலுக்கு முன்னால் கி.பி. 12 ஆம் நூற்றாண்டுச் செக்கொன்றுள்ளது. ஸ்ரீகாரி என்பவர் சார்பாக வீர தச்சன் என்பவரால் இந்த செக்கு செய்தளிக்கப்பட்டுள்ளது.

திருத்தங்கல்

விருதுநகரிலிருந்து சிவகாசி செல்லும் சாலையில், சிவகாசிக்கருகில் அமைந்துள்ள திருத்தங்கலில் நுண்கற்கருவிகளும், கறுப்பு சிவப்பு பானை ஓடுகளும் கிடைப்பதிலிருந்து, சற்றேறக்குறைய கி.மு. நான்காயிரத்திலிருந்தே இங்கு மக்கள் குடியிருப்புகள் இருந்து வருகின்றன எனலாம். சங்க காலப் புலவர்களில் சிலர் இவ்வூரினராக இருப்பதிலிருந்து, இவ்வூர் சங்ககாலத்தில் இலக்கியப்படைப்புகளில் சிறந்து விளங்கிய அறிஞர்கள் வாழ்ந்த பகுதியாக விளங்கியமை தெளிவாகிறது. சங்ககாலப் பாண்டியர்களின் தலைநகராக விளங்கிய மதுரையிலிருந்து சேரநாட்டிற்குத் திருத்தங்கல் வழியாக பெருவழி அமைந்திருந்தமைக்குச் சிலப்பதிகாரத்தில் தெளிவான குறிப்புள்ளது. காவிரிப்பூம்பட்டினத்து அந்தணரான பராசரன் என்பவர் சேரநாட்டிற்குச் சென்று, திரும்பி வரும்போது வழியில் திருத்தங்கலில் தங்கியதாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

இத்தகு சிறப்புமிகு திருத்தங்கலில் உள்ள குன்றில், கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் பள்ளி கொண்ட பெருமாளுக்காகக் குடைவிக்கப்பட்டுள்ள குடைவரைக் கோயிலொன்றுள்ளது. இக்குன்றின் மேற்பகுதியில் நின்ற நாராயணப் பெருமாளுக்காக கோயிலெடுப்பிக்கப்பட்டுள்ளது. 108 வைணவ திவ்விய தேசங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் இத்திருக்கோயில் திருமங்கையாழ்வாராலும், பூதத்தாழ்வாராலும் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில், கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில், முதலாம்

மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில், தடங்கண்ணிச் சிற்றூருடையான் சோரன் உய்யநின்றாடுவானான குருகுலத்தரையன் என்ற அதிகாரியால் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு கற்றளியாக்கப்பட்டுள்ளது. முதலாம் வரகுணபாண்டியன் காலத்தில் அளற்றுநாட்டுக்கிழவன் என்பவர் இக்கோயிலில் விளக்கெரிப்பதற்காக ஆடுகளைத் தானமாக அளித்துள்ள செய்தியைக் குறிக்கும் வட்டெழுத்துக் கல்வெட்டு, இக்கோயிலின் தொன்மையைப் புலப்படுத்தும் சான்றாக இக்கோயிலில் இன்றளவும் இருந்து வருகிறது. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில், இக்கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளில் கற்றளித்திருப்பணி மேற்கொண்ட குருகுலத்தரையன், இத்திருக்கோயிலில் தன்பெயரிலும், தன்னுடைய மன்னன் முதலாம் சுந்தரபாண்டியனின் பெயரிலும் சிறப்பு வழிபாடுகளை ஏற்படுத்தி, இவ்வழிபாடுகளின் செலவினங்களுக்காக வேண்டி நிலக்கொடையும் வழங்கியுள்ளார். முதலாம் குலசேகர பாண்டியனின் காலத்தில் திருவரங்கதேவன் திருமண்டபம் அமைக்கப்பட்டு, நரசிங்கதேவருக்கான வழிபாட்டுச் செலவினங்களுக்காக நிலக்கொடையும் வழங்கப்பட்டுள்ளது.

நாகலாபுரம் சமீன்தாராக இருந்த ரெங்கசாமி நாயக்கர் என்பவர், வெள்ளிக்கிழமை பூசைகளை நடத்துவதற்காக, சுக்கிரவாரக் குறடு என்ற மண்டபத்தை கி.பி.1885ல் இக்கோயிலில் கட்டியுள்ளார். இவரது உருவச்சிலையும் இம்மண்டபத்திலுள்ளது.

இத்திருக்கோயிலில் வைகாசித் திருநாள் சிறப்பு வழிபாடுகளை நடத்த, சுந்தரபாண்டியன் காலத்தில் (கி.பி.1221) திருவரங்கதேவன் குன்றெடுத்தான் என்பவரும், அவருடைய இளைய சகோதரர் திருவரங்கதேவன் உய்யக் கொள்வான் என்பவரும், இத்திருக்கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியுள்ளனர். இத்திருக்கோயிலில் ஆவணி சிறப்பு வழிபாட்டின்போது இறைவன் நெய்யாடியருளியிருக்கிறார். இச்சிறப்பு வழிபாட்டுச் செலவினங்களுக்காக வேண்டி சுந்தரபாண்டியனின் காலத்தில் (1216 1239) ஆத்திரையன் குன்றெடுத்தான் ஸ்ரீவல்லபன் என்பவர் நிலக்கொடை நல்கியுள்ளார். அம்மாவாசை நாட்களில் இறைவனை வீதிவலமாக எழுந்தருளப் பண்ணுவதற்காக சோழமன்னன் முதலாம் குலோத்துங்கனின் காலத்தில் இத்திருக்கோயிலுக்கு நிலக்கொடை வழங்கப்பட்டுள்ளது. இங்ஙனம் இத்திருக்கோயிலில் வைகாசி விசாகம், ஆவணி சிறப்பு வழிபாடு, அம்மாவாசை வழிபாடு போன்றவை சிறப்பாகக் கொண்டாடப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நின்ற நாராயணப் பெருமாள் கோயில் வளர்ச்சியில் மகளிரும் பெருமளவில் பங்கெடுத்துக்கொண்டுள்ளனர். அதிலும் குறிப்பாகப் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளில் மகளிரின் பங்களிப்பு தொடர்பான செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. முத்தூற்றுக் கூற்றத்திலிருந்த அந்தனூரைச் சேர்ந்த காலிங்கராயனான உய்யநின்றாடுவானின் துணைவியார் சடகோபன் திருநங்கை என்பவர் இறைவன் மற்றும் இறைவிக்காக வழங்கியுள்ள நிலக்கொடை, முத்தூற்றுக் கூற்றத்திலிருந்த அந்தனூர் சிறுகம்பூரைச் சேர்ந்த உய்யநின்றாடுவானான உடையார் காலிங்கராயனின் துணைவியார் திருமங்கையாண்டாள் என்பவர் இறைவழிபாட்டிற்குத் தேவையான செங்கழுநீர்ப்பூக்கள் விளையும் நீர்நிலை பராமரிப்புச் செலவினங்களுக்காக வேண்டி நல்கியுள்ள நிலக்கொடை, திருவரங்கதேவன் என்பவருடைய மனைவி ஆட்கொண்டி, சூரியநாராயணன் என்பவருடைய மனைவி திருமகள் ஆகியோர் ஈந்துள்ள ஆடுகள், திருத்தங்கலைச் சேர்ந்த அசிபத்த நாராயணன் என்பவருடைய துணைவியார் கொற்ற நாச்சியார் என்பவர் நந்தா விளக்குக்காக வழங்கியுள்ள கொடை, வெண்புநாட்டு ஸ்ரீவானவன்மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த பொன்னாளிகையார் என்பவரின் மனைவி உய்யவந்தாள் என்பவர் சந்தியாதீபத்திற்காக அளித்துள்ள கொடை, போன்ற பல்வேறு கொடைகளைக் குறிப்பிடுகின்ற பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

பாண்டியராட்சிக் காலத்தில் திருத்தங்கலின் அமைவிடம் ஸ்ரீபாண்டி நாட்டிற்குட்பட்ட மதுரோதைய வள நாட்டிற்குள் அமைந்திருந்த கருநிலக்குடி நாட்டிற்குள் இருந்ததாகக் கல்வெட்டுகள் சுட்டுகின்றன. மூலபருடையார் என்றழைக்கப்பட்ட அந்தணர் சபை அமைப்பால்

நிர்வகிக்கப்பட்ட பிரமதேயமாக திருத்தங்கல் திகழ்ந்துள்ளமையையும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் தெளிவாக்குகின்றன. திருத்தங்கல் பகுதியை வளப்படுத்திய நீர்நிலைகளாக தேவேந்திர வல்லபப் பேரேரி, நின்ற நாராயணப் பேரேரி போன்ற ஏரிகள் விளங்கியுள்ளமையையும் கல்வெட்டுக்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

நின்ற நாராயணப் பெருமாள் கோயில் அமைந்துள்ள குன்றில், கிழக்குப் பகுதியில் பெருமாள் கோயிலுக்கருகிலேயே சிவாலயமும் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலிறைவனாகிய தங்கலீசர், கருநெல்லிநாத சுவாமி என்றும், இறைவி மீனாட்சி என்றும் சுட்டப்படுகின்றனர். நின்ற நாராயணப் பெருமாள் கோயிலின் திருப்பணியை மேற்கொண்ட தடங்கண்ணிச் சிற்றூருடையானாகிய சோரன் உய்யநின்றாடுவானான குருகுலத்தரையனே இச்சிவாலயத்தின் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் போன்றவற்றை அடி முதல் முடிவரை கருங்கல்லால் கட்டி முடித்ததாகச் சுந்தரபாண்டியனின் பதினேழாம் ஆட்சியாண்டுக்கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. திருத்தங்கலீசர் இனிமேல் பிச்சாடன மூர்த்தியாகக் கபாலம் ஏந்தி பிச்சை எடுக்க வேண்டியதில்லை. அவருடைய வழிபாட்டுச் செலவினங்களுக்காக வேண்டி நிலக்கொடை வழங்கப்பட்டுள்ளதென பிற்காலப் பாண்டியர் கல்வெட்டொன்று புகல்கிறது. இறைவன் மற்றும் இறைவியரின் வழிபாட்டுச் செலவினங்களுக்காக வேண்டி குமார ரெங்கப்ப நாயக்கர் என்பவர் உடையப்பன் குளம் பகுதியிலிருந்து கொடையளித்துள்ளார்.

கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டளவில் குதிரை வீரன் ஒருவன் நினைவாக நடுகல்லொன்றெடுக்கப்பட்டுள்ளது. வரதுங்கராம தனிப்புலி கலங்காத கண்ட நாயக்கரின் வேலைக்காரனான உள்ளி பொம்மன் கலங்காத கண்டநாயக்கர் என்பவருக்கு இரத்தக் காணிக்கையாக திருத்தங்கலில் நிலம் வழங்கப்பட்டிருந்தமையை இக்கல்வெட்டு புலப்படுத்துகிறது.

மங்கலம்

சிவகாசியிலிருந்து கிருஷ்ணன் கோயிலுக்குச் செல்லும் சாலையில் அமைந்துள்ள இவ்வூரின் வடக்குப் பகுதியில் கிடைக்கின்ற கறுப்பு சிவப்பு பானை ஓடுகளிலிருந்து இவ்வூர் சங்ககாலப் பழமை உள்ள பகுதி என்பது தெளிவாகிறது. இவ்வூர் பிற்காலப் பாண்டியர் காலத்தில் மதுரோதைய வளநாட்டிற்குட்பட்ட கருநிலக்குடி நாட்டுப் பகுதிக்குள் அமைந்திருந்த குலசேகரச் சதுர்வேதி மங்கலத்தின் தென் பிடாகையாக விளங்கியுள்ளது. இவ்வூரிலுள்ள கைலாசநாதர் கோயிலாகிய சிவாலயம், பன்னிரெண்டாம் நூற்றாண்டளவில் ஆயிரத்தெண்மீசுவரமுடையார் கோயிலென்ற பெயரில் சிறப்புடன் விளங்கியுள்ளது. குலசேகர பாண்டியனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1195) வீரபத்திர நல்லூர் பகுதி இக்கோயிலுக்குரிய தேவதானப் பகுதியாக இருந்துள்ளது. குலசேகரச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் திருமடைப்பள்ளிப்புறமாக இக்கோயிலுக்கு விற்றளித்துள்ள பகுதி குறித்து ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவ்வூரிலுள்ள இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலிலுள்ள முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய கல்வெட்டொன்று வீரபண்டித விண்ணகர் எம்பெருமான் என்ற பெயரில் பெருமாள் கோயில் கட்டப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

ஈஞ்சார்

சிவகாசி வட்டத்திலுள்ள மங்கலம் உள்வட்டத்தில், சிவகாசிக்கும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குமிடையில் அமைந்துள்ள ஈஞ்சார், கல்வெட்டுகளில் தடங்கண்ணிச் சிற்றூர் எனச் சுட்டப்பட்டுள்ளது. அர்ச்சுனா நதிக்கரையில் கிடைக்கும் நுண்கற்கருவிகளும், இவ்வூரின் வயல்பரப்புகளில் கிடைத்து வரும் கறுப்பு சிவப்புப் பானை ஓடுகளும் இவ்வூரின் தொன்மைக்கான சான்றுகள்.

இவ்வூரிலுள்ள சிவாலயம் சோறன் உய்ய நின்றாடுவான் குருகுலத்தரையனால், அவனுடைய மன்னன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பெயரில் கட்டப்பட்டுள்ளமையை அக்கோயில்

மகாமண்டபத்தில் மேற்குச் சுவரிலுள்ள கல்வெட்டொன்றிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இக்குருகுலத்தரையன், தடங்கண்ணிச் சிற்றூராகிய ஈஞ்சாரைச் சேர்ந்தவர் என்பதும், இவரே திருத்தங்கலில் சிவாலயத்திலும், பெருமாள் கோயிலிலும், திருப்பணி மேற்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவன் கோயில் அருகில் சாலை ஓரத்திலுள்ள செக்கொன்றில் காணப்படும் கல்வெட்டிலிருந்து அச்செக்கானது கி.பி.பதினொன்றாம் நூற்றாண்டளவில் வாண (விச்சா) திரனான எண்ணங்கலக்கியப் பேரரையன் என்பரால் செய்தளிக்கப்பட்டுள்ளமையைத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

எதிர்க்கோட்டை

சிவகாசிக்கும் வெம்பக்கோட்டைக்கும் நடுவிலமைந்துள்ள எதிர்க்கோட்டையில் முற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சைவ, வைணவ ஆலயங்கள் உள்ளன. மிகுதியாகப் பருத்தி விளையக்கூடிய எதிர்க்கோட்டைப் பகுதியில் பத்தாம் நூற்றாண்டளவிலேயே துணி வணிகர்கள் இருந்துள்ளனர். அறுவை வணிகச்சேரியைச் சேர்ந்த ஆச்சன் என்பவர் கூத்தங்குடி, சுனைக்குடி படாரர் கோயிலில் நந்தா விளக்கெரிக்க வேண்டி ஐம்பத்தைந்து ஆடுகளைக் கொடையாக அளித்துள்ளதைத் தெரிவிக்கும் கல்வெட்டு இவ்வூரில் அறுவை வணிகச்சேரி அனமந்திருந்ததை உறுதிப்படுத்துகிறது. வேணுகோபால சுவாமி திருக்கோயிலிலுள்ள முதலாம் இராசராசசோழனின் கல்வெட்டொன்று கூத்தங்குடி நகரத்தார் வழங்கியுள்ள நிலக்கொடையைக் குறிப்பிடுகிறது. இராசராசசோழன் காலத்தைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு திசையாயிரத்தைஞ் நூற்றுவர் என்ற வணிகக் குழுவினர் வழங்கியுள்ள கொடையைக் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள செய்திகளனைத்துமே சற்றேறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எதிர்க்கோட்டைப் பகுதியில் வணிகர்களின் செயல்பாடுகள் மிகுந்திருந்தமையை உறுதிப்படுத்துபவையாக உள்ளன.

கொத்தனேரி

விருதுநகரிலிருந்து ஆமத்தூர் வழியாக வெள்ளூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

இவ்வூருக்கு வெளியில் பதினெட்டாம் நூற்றாண்டு நினைவுக்கற்கள் உள்ளன. ஒரு கல்லில் கோபால நாயக்கர் என்ற வீரனின் உருவம் கையில் கத்தியுடன் செதுக்கப்பட்டுக் கல்லின் மேற்பகுதியில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு கல்லில் சுப்பையா நாயக்கர் என்ற வீரனின் உருவம் அஞ்சலித்த நிலையில் செதுக்கப்பட்டு, தலைக்கு மேல் வீரனின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. பிறிதொரு நினைவுக்கல்லில் கவுண்டம்பட்டியைச் சேர்ந்த மாரியப்பன் என்பவரின் துணைவியார் செல்லத்தம்மாளின் உருவம் அஞ்சலித்த நிலையில் செதுக்கப்பட்டுப் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. அடுத்தொரு கல்லில் கவுண்டம்பட்டியைச் சேர்ந்த முத்தப்ப நாயக்கரின் மகன் கோபால நாயக்கரின் மனைவி சின்னமாரியம்மாளின் உருவமும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

மானகச்சேரி.த.

தடங்கண்ணி மானகச்சேரி என்றழைக்கப்படும் இவ்வூர் ஸ்ரீவில்லிபுத்தூர் சிவகாசி சாலையில் அமைந்துள்ளது. இவ்வூரில் ஒரு கிணற்றினருகிலுள்ள ஆசிரியம் கல்வெட்டிலிருந்து வீரபண்டித ஈசுவரமுடையார் கோயிலின் தேவதானமான குலசேகரபுரம் என்ற வணிக நகரில், வெண்பில் நாட்டார், கருநிலக்குடி நாட்டார், இருஞ்சோ நாட்டார், ஆரி நாட்டார், வெண்பைக்குடி நாட்டார், திருமல்லி நாட்டார் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட பாதுகாப்பைத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

சோழபுரம்

ஸ்ரீவில்லிபுத்தூர் திருநெல்வேலி சாலையில், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சுமார் 20 கி.மீ., தொலைவில், உத்தமசோழச்சதுர்வேதி மங்கலமான சோழபுரம் அமைந்துள்ளது. இவ்வூரில் ஓடும் தேவியாற்றின் கரையில் கிடைத்து வரும் நுண்கற்கருவிகள் இப்பகுதியின் தொன்மைக்கு மிகச்சிறந்த சான்றுகள் எனலாம். மேலும் இப்பகுதியில் கிடைத்துவரும் கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும் முதுமக்கட் தாழிகளின் பகுதிகளும் இப்பகுதியின் தொன்மையை உறுதி செய்கின்றன. இவ்வூரில் உத்தமசோழ விண்ணகராழ்வாரான வெங்கடாசலபதி பெருமாள் கோயிலும், விக்கிரம பாண்டீசுவரமுடையாரான சிவன் கோயிலும் உள்ளன. சிவாலயத்தின் வெளித்திருச்சுற்றிலுள்ள கோபுர நுழைவாயிலானது பிற்காலப் பாண்டிய வேந்தன் சுந்தரபாண்டியனின் பெயரால் அமைக்கப்பட்டுள்ளது. உள்திருச்சுற்றின் நுழைவாயிலான கோபுரம் தம்பிக்கு நல்லான் திருவாயில் என்ற பெயரிலுள்ளது. இரண்டாம் கோபுர நிலைக்கால் உதையன் உடையானான சுந்தரபாண்டியப் பல்லவரையன் என்பவர் பெயரால் அமைக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலிலுள்ள நடராசர் மண்டபத்தின் முன்னுள்ள மண்டபம் பிரம்பிலூரைச் சேர்ந்த பெரியான் பெருமாளான வேணாவுடையரால் கட்டப்பட்டுள்ளது. இம் மண்டபத்திலுள்ள தூண்களைச் சோழகுலாந்தகபுரத்து சடைய மந்திரிகள், நாங்கூரைச் சேர்ந்த சோதி சூற்றியானான சுந்தரப் பெருமான், தன்மபாலன், பள்ளி சூரியனான சோமன் தேவன், நாங்கூரைச் சேர்ந்த சாமந்தனான, சேலன், அரசூரைச் சேர்ந்த உய்யநெறிகாத்தானான உதையன் உமையான் போன்ற பலரும் செய்தளித்துள்ளனர். இவர்களுள் கோநாங்கூரைச் சேர்ந்த பட்டரான தனபாலன் என்பவர், இறைவன் அவருடைய பிரார்த்தனையை நிறைவேற்றி, அவருக்கு மகன் பிறக்கச் செய்தமைக்கு இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக ஒரு தூணைச் செய்தளித்தள்ளதாக அத்தூண் கல்வெட்டு தெரிவிக்கிறது. இறையருளால் பிறந்த அவர் மகனுக்கு உடம்பிறப்பிழகியான் என்ற பெயரைச் சூட்டியதாகவும் அக்கல்வெட்டு புலப்படுத்துகிறது. சோழபுரம், முடிவழங்கு பாண்டியன், குன்றத்தூர், இரண்டு சொல்லாதான், சேதுராமகுறிச்சி, சாமந்த கண்டன் வீரசிங்க நல்லூர், பாண்டியதேவ குறிச்சி போன்ற பல்வேறு ஊர்களில் விற்கப்படுகின்ற புடவை ஒன்றுக்குக் காணிப் பணத்தைக் ($^{1}/_{80}$) கோயிலுக்குத் தானமாக வழங்கி, அதன் மூலம் விக்கிரமபாண்டீசுவர முடையார் கோயிலில் கட்டடப் பராமரிப்புத் திருப்பணிகளை மேற்கொண்டுவர மேற்குறித்த ஊரார் மேற்கொண்ட முடிவை ஒரு கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

தென்காசிப் பாண்டியமரபைச் சேர்ந்த குலசேகர பாண்டியனின் கல்வெட்டொன்றிலிருந்து (கி.பி.1561), மதுரையிலுள்ள திருவாலவாயுடையார் திருக்கோயிலில் மாடாபத்தியமாகப் பணியாற்றிவந்த ஊருடைய முதலியான வீரபாண்டிய சூடிக்கொடுத்த முதலி என்பவர், இளவரசர் அழகன்பெருமாள், அதிவீரராமனின் விருப்பப்படி, வீரபாண்டிசுவரமுடையார் கோயிலில் கோயிற்கணக்கராகப் பணியில் அமர்த்தப்பட்டதை ஒரு கல்வெட்டு புலப்படுத்துகிறது. தென்காசிப் பாண்டிய மன்னனான குலசேகர பராக்கிரம பாண்டியனின் (கி.பி.1573) கல்வெட்டொன்று வாசு தேவநல்லூர் கோயில் கைக்கோளரான அழகர் என்ற பட்டர் ஒருவர், விக்கிரம பாண்டீசுவரமுடையார் கோயிலில் மாடாபத்தியமாக நியமிக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. இவருக்கு இப்பணிக்காக வேண்டி இரண்டு மா நிலம் மாடாபத்தியக் கணக்குக் காணியாட்சியாக பரம்பரை பரம்பரையாக அனுபவிக்கத்தக்க வகையில் வழங்கப்பட்டிருந்ததையும் இக்கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

ஆரிநாட்டுத் தனியாணைச் சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் சக்கனேரிப் பகுதியில் சில நிலங்களைக் காராண்மைச் சென்மமாக சூரியதேவன் தம்பிக்கு நல்ல பெருமாளான பிள்ளை சுந்தரபாண்டிய வாணகோவரையருக்கும், வாடாக்கடமையாக விக்கிரமபாண்டீசுவரமுடையார் கோயிலுக்கும் விற்றளித்த செய்தி ஒரு கல்வெட்டிலுள்ளது. சக்கனேரிப் பகுதியிலிருந்த நிலங்களைப் பாண்டியமன்னன் (கோனேரின்மை கொண்டான்) சுந்தரபாண்டிய வாண கோவரையரிடமிருந்து கற்பூரவிலையாக 1000 பணத்திற்கு வாங்கி, அந்த நிலங்களின்

வருவாயிலிருந்து 100 பொன் கொண்டு, கோயிலின் தினசரி வழிபாடுகளையும், மன்னன் பெயரில் ஏற்படுத்தப்பட்ட விழாவினையும் நடத்திட வழிவகை செய்யப்பட்டிருந்தது.

இங்ஙனம் மாறவர்மன் விக்கிரபாண்டியனின் (கி.பி.1250 - 78) பெயரில் சிறப்புமிக்க சிவாலயமாக விளங்கிய இத்திருக்கோயில் போலவே இரண்டாம் குலோத்துங்கனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றான உத்தமசோழன் என்ற பெயரில் உருவான உத்தமசோழவிண்ணகரமாகிய வெங்கடாசலபதி கோயிலும் தனிச்சிறப்புடன் திகழ்ந்து வருகிறது. சிவாலயத்திற்கு தென்மேற்கில் அமைந்துள்ள இப்பெருமாள் கோயிலில் அந்தராள மண்டபம், மகாமண்டபம், சோபானம் போன்ற பகுதிகளைக் களத்தூரைச் சேர்ந்த வீரன் கலங்கரியானான வேணாவுடையார் என்பவர் கட்டியுள்ளமையைக் கல்வெட்டொன்றிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இத்திருக்கோயிலில் சேர நாராயணன் திருமண்டபத்தில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணியைக் கல்வெட்டொன்று புலப்படுத்துகிறது. வெள்ளையறை நல்லூர், திருச்சேலூர், அமன்புத்தூர், கொண்டையநேரி, உபநயனமங்கலம் போன்ற பல கிராமங்கள் இப்பெருமாள் கோயிலுக்கு வழங்கப்பட்டிருந்துள்ளன. மன்னார் மற்றும் நாச்சியார் திருமேனிகளின் வழிபாடுகளுக்காக வேண்டி திருவிடையாட்ட இறையிலியாக இக்கோயிலுக்கு எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரபாண்டியன் காலத்தில் நிலக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

முதுகுடி

இராசபாளையம் சோழபுரம் சாலையில் இராசபாளையத்திலிருந்து சுமார் ஆறு கி.மீ. தூரத்திலமைந்துள்ள முதுகுடியில் பாண்டிய மன்னன் முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியனின் 34ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த நடுகல் கல்வெட்டொன்றுள்ளது. (கி.பி.1302). இவ்வூருக்கு வடமேற்கிலுள்ள கருங்குளத்தில் உடைப்பு ஏற்பட்டபோது, அக்குளத்தின் பாதுகாப்புப் பணியிலிருந்த பெரிய தேவப் பள்ளன் என்பவர் பாதுகாப்புப் பணியிலீடுபட்டு ஊர்மக்களைக் காக்க உயிர் நீத்த வீரத்தைப் பாராட்டி இந்நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வீரனின் மகளுக்கு அரைமா நிலம் உதிரப்பட்டியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

புதுப்பாளையம் (இராசபாளையம்)

இன்று இராசபாளையத்தின் ஒரு பகுதியாக விளங்கிவரும் புதுப்பாளையம் பகுதிக்குக் கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டளவில் கருங்குளம் என்றும் சாதவாசகநல்லூர் என்றும் பெயர்கள் வழங்கி வந்துள்ளன. இங்குள்ள பரன்னங்காத்தருளிய சுவாமி திருக்கோயில் கி.பி.13ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டுள்ளது. இராசவல்லிபுரத்தைச் சேர்ந்த ஒருவாருணர்ந்தான் எனக்கு நல்லபெருமாள் என்பவரின் பெயரால் இங்கு எனக்கு நல்லபெருமாள் மடம் என்ற மடமொன்று செயல்பாட்டிலிருந்துள்ளது. இரண்டாம் சுந்தரபாண்டியனின் கல்வெட்டொன்றிலிருந்து (கி.பி.1248 - 49) திருவாரூர் கிருஷ்ணகோளகி மடத்தலைவரின் சீடரான ஈசானதேவருக்கும், எனக்கு நல்லபெருமாள் மடத்திலுள்ள சீடர்களுக்கும் வேண்டி மன்னன் மடப்புறமாகப் பன்னிரண்டு மா நிலம் வழங்கியிருந்தமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. வேறு சில கல்வெட்டுகளும், இம்மடத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிலவிபரங்களைக் குறிப்பிடுவனவாகக் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து கி.பி.13ஆம் நூற்றாண்டளவில் இந்த மடம் மிகச் சிறப்பான நிலையிலிருந்துள்ளமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. பறவை அன்னங்காத்தர் கோயிலின் (பரன்னங்காத்தார் கோயிலின்) கருவறை நுழைவாயிலிலுள்ள கல்வெட்டிலிருந்து அந்த நிலைக்காலையும், படியையும் வாள்வல்ல பாண்டியதேவன் என்பவர் செய்தளித்துள்ளமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஸ்ரீவல்ல பாண்டியனின் கல்வெட்டொன்றிலிருந்து (கி.பி.1297) இக்கோயிலுக்கு வழங்கப்பட்டிருந்த நந்தாவிளக்குக்கான கொடை பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

தேவதானம்

மதுரை செங்கோட்டை சாலையில் இராசபாளையத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தேவதானம் நுண்கற்காலத்திலிருந்தே வரலாற்றுச் சிறப்புடைய பகுதியாகத் திகழ்ந்து வருகிறது. இவ்வூரின் மேற்குப் பகுதியில் நெடும்பரம்பில் காணப்படும் முதுமக்கள் தாழிகள் இவ்வூரின் தொன்மை வரலாற்றிற்குச் சான்றாகின்றன. செம்மரமான குலசேகரபுரம் என்ற பெயரில் கல்வெட்டுக்களில் சுட்டப்படும் இவ்வூரில் அமைந்துள்ள சிவாலயத்திறைவனைக் கல்வெட்டுகள் உடையார் பகவான் பாறை ஆளுடைய நாயனார் என்றழைக்கின்றன. பிற்காலக் கல்வெட்டுகளில் இவ்விறைவன் நச்சாடை தவிர்த்தருளிய நாயனார் என்று சுட்டப்பட்டுள்ளார். முற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டு கி.பி.13 ஆம் நூற்றாண்டளவில் திருப்பணி செய்யப்பட்டுள்ள இச்சிவாலயத்தில், பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபன் ஆகவராமன் சந்தி என்ற பெயரில் சிறப்பு வழிபாட்டினை ஏற்படுத்தித் தேவதானமாக கண்டன்குளம் பகுதியில் நிலமுமளித்துள்ளார். தென்காசிப் பாண்டியர் மரபைச் சேர்ந்த பராக்கிரம பாண்டியன் இக்கோயிலில் காலை சந்திபூசையை ஏற்படுத்தி அதற்கான செலவினங்களுக்காக வேண்டி கண்டங்குளம் பகுதியில் நிலமும் அளித்துள்ளார்.

தென்காசிப் பாண்டியர் மரபைச் சேர்ந்த குலசேகர பாண்டியனின் கல்வெட்டொன்று (கி.பி.1554) இக்கோயிலில் மதுரை ஆலவாயுடையார் கோயிலைச் சேர்ந்த ஊருடைய முதலியாரான வீரபாண்டி தேவர் என்பவர் மாடாபத்யக் கணக்கராக நியமிக்கப்பட்டு, அப்பணிக்காக அவருக்குக் காணியாட்சியாக நிலமும் வழங்கப்பட்டிருந்ததைக் குறிப்பிடுகிறது.

இங்ஙனம் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கல்வெட்டுக்களிலிருந்து இப்பகுதி தொடர்பான அரசியல், சமய, சமுதாய மற்றும் பொருளாதாரம் தொடர்பான வரலாற்று நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

INTRODUCTION

As a result of the Intensive Epigraphical compaign, launched by the commissioner of Archaeology, the department has already published the first volume of inscriptions of the Virudhunagar district in which the inscriptions deciphered from Aruppukkottai, Thirucchuliyal, Kariyappatti, Virudhunagar, and Sattur taluks are included. In continuation of that first volume, in this second volume, Inscriptions noticed from certain areas in virudhunagar, Sivakasi and Rajapalayam taluks are included. These inscriptions throw light on the political, cultural, ecomnomical, religious and art history of this area.

SORAMPATTI

There is a memorial stone in the shiva temple at Sorampatti village located near the road that leads to Muthulingapuram village, which was installed in memory of a certain Kudiyan Kuricchan, who hailed from Thisaisudarmanimangalam, in Karunilakkudinadu and it is datable to 12th century A.D.,

KARISERI

Here in this village, there is an oil press (chekku) in front of the Lakshminarayanaperumal temple, donated by a certain Veerathacchan, native of Ari yanvilmadai, on behalf of an one ' Srikari ', in 12th century A.D.,

THIRUTTHANGAL

The antiquity of the human settlement at Thirutthangal , located very near to Sivakasi on the road that leads to Sivakasi from Virudhunagar, dates back to the microlithic period since we get a number of microlithic tools and Black and Red ware potteries from there . The location of this town on one of the ancient highways that linked the Chera country with Madurai the capital of the Pandyas also seems to be a good reason for the speedy development of this town as one of the popular centre of learning and as a result of this development, some poets of the sangam classics had hailed from this town. As portrayed in Silappadhikaram, Parasaran, a learned brahmin, on his way back from the Cheranadu is said to have stayed at this town, which proves beyond doubt that Thirutthangal was a popular town during the period of great epics.

Here in this town at the bottom of the hillock there is a rock cut cave temple dedicated to vishnu which can be dated to eighth century A.D., In this rock cut cave the image of Pallikondaperumal is carved (vishnu in the reclaining posture)

Number of inscriptions have been copied from Nindranarayanaperumal temple, which was constructed on the top of the hillock during the Early Pandya period and then renovated in the 13th century and again rebuilt most probably during the Nayak period . Among the insriptions copied from this south facing temple, the earliest one is engraved in Vetteluthu characters and it dates back to the period of Varuguna Pandya I. The antiquity of this temple is further attested by the hymns of the Alwars, Bhutathalvar and Thirumangai Alwar.

Tadanganni chitrurudaiyan Choran Uyyanindraduvan alias Gurukulatharaiyan , an official of Maravarman Sundhara Pandya I, had shown keen interest in the upkeeping of this temple, and took up the rebuilding of the garbagraha of this temple. Further he had made some land endowments to meet out the expenses of the special pujas instituted in his name and in the name of his master SundaraPandya I. An inscription of Kulasekara pandya records the contruction of the Thiruvarangadevan Thirumandapam in the prakara of this temple, and the land endowments made for the puja expenses of the deity Narasimma installed in this temple. A small mandapa by name ' Sukravarakuradu' was constructed in this temple around 1885 A.D., by Rengasamy Naicker, who was a Zamindar of Nagalapuram for Friday pujas. Certain building activities of this temple like the Mukamandapam, wooden shed of Manavalamuni shrine, Garudamandapam, mukamandapam of the Renganathan shrine were carried out by the trustboard during the early phase of the 20th century.

Special pujas were conducted in this temple on the day of Vaikasi vishakam . For this purpose two brothers namely Thiruvarangadevan Kundreduthan and his younger brother Thiruvarangadevan uyyak kolvan had made some land endowment during the period of Sundara Pandya (1221A.D.,) During the Avani festival, special ghee abhishekam (Neyyadal) was made to the deity. To meet out the expenses of this special annointment certain Atthiraiyan Kundredutthan Srivallaban had made an endowment of land during the period of Sundara Pandya (1216- 1239 A.D.,) The idol was taken out in procession on New moon days (Ammavasai). For this purpose certain land endowment was made during the period of the chola king Kulotthungachola I

Ladies also have contributed a lot to the welfare of this temple. Sadagopan Thirunangai wife of Uyyanindraduvan alias Kalingarayan, a native of Andhanur in Mutthutrukkurram seems to have made some land gift to the God and Goddess . during the period of kulasekara pandya. Thirumangaiyandal wife of Uyyanindraduvan alias udayan kalingarayan, a native of Anthanur Sirukambur located within Mutthuttruk kurram, had made certain land endowment to meet out the expenses of maintaining the tank which yielded flowers for the worship of God. Two ladies, one by name Atkondi, wife of Thiruvarangadevan and another by name Thirumakal wife of Suriyanarayanan had made endowment of sheep. Kotranacchiyar, a wife of Asipattanarayanan, a resident of Thirutthangal had endowed a perpectual lamp.Uyyavandhal wife of Ponnalakiyan, a native of Srivanavanmadevicchathurvedimangalam, in Venbunadu had donated for a ' Sandya deepam'. The above mentined gifts made during the Later Pandya period, clearly prove that ladies too had played an important role in the development of this temple .

As per the political geography noticed from the inscriptions, Thirutthangal was a Devadhana Brahmadheyam in Karunilakkudinadu, in Madhuroadhaya valanadu of Sri Pandi Nadu. This brahmadheya settlement was administered by the brahmin sabha 'Mulaparushai'. This locality was well irigated by certain tanks like Davendharavallabhappereri and Nindranarayanappereri.

On the top of the hillock, on the eastern side to this vishnu temple there is shiva temple also. This temple popularly known as Karunellinathaswamy temple was built in stone for Thangal Isar and his consort Gauri by Soran Uyyanindraduvan alias Gurukulattharaiyan of Thadankannichitrur. An inscription found in the southern wall of the

this shiva from becoming a Bhiksatana to beg for his daily bowl of bali, by instituting a special service and making provisions for food offerings to the deity. From an iscription engraved in the north wall of the central shrine of this temple we come to know that a certain Kumararangappa Nayakkar had gifted 1/4 share of the Udaippankulam village to this temple, for the purpose of meeting out the puja expenses of both shiva and Amman.

A hero stone inscription also has been copied from Thirutthangal which records the 'ratthakkani' donated in praise of a certain Ullibomman Kalangatha Kandanayakkar's blood sacrifice. This inscription further records that he was a servant of Varadhungarama Thanippuli kalangatha kandanayakkar. This record can be dated back to 17-18th century A.D.,

MANGALAM

From the availablity of Black and Red ware potteries and Iron age implements from the village Mangalam, which is located in between Sivakasi and Kirisnankoyil, we can safety say that this area was a sangam period settlement area.As per the political division of the Later Pandyas, this village was a southern hamlet of Kulasekaracchathurvedi mangalam, located within Karunilakkudi nadu in Madhurodhaya valanadu. The shiva temple, (the Kailasanathar koyil), is in existence from the 12th century A.D., and during that period this temple was popularly known as 'Ayirathenmisvaramudaiyar' temple. Veerapathiranallur was a devadhana of this temple during the period of KulasekaraPandya (1195 A.D.,). An endowment made as 'Thirumadaippallipuram' to this temple by the Sabha of Kulasekaracchaturvedimangalam is recorded is one of the inscriptions. we come to know about a vishnu temple by name 'Veerapanditha Emperuman' from an inscription dating back to the period of Maravarman Sundarapandya I.

INJAR

Archaeologically the antiquity of the settlements of Injar, which is located in between Sivakasi and Srivilliputhur, dates back to the microlithic period, since from a mound located west of the shiva temple, microlithic tools, Black and Redware potteries, and urns are available. The shiva temple of this village was constructed by Soran Uyyanindraduvan alias Gurukulatharaiyan and was named after his king Maravarman Sundarapandya I(AD 1216- 1238). This Gurukulatharaiyan was a native of this village Injar, which was otherwwise called by the name Thadankkannichitrur as noticed in the Later Pandya inscriptions. The same Gurukulatharaiyan had keenly taken part in the constrution works of both Shiva and Vishnu temples at Thirutthangal also. Near the shiva temple on the road side an oil press is found with an inscription which can be dated back to eleventh century.The inscription records that that oil press was installed by certain Vanavichadhiran alias Yennankalakkip peraiyan.

YEDHIRKKOTTAI

At Ethirkkotai, in the cottan producing belt of Virudhunagar region, located in between Sivakasi and Venbakottai, we have both siva and vishnu temples datable to the Early Pandya period. This village was a popular centre of the textile merchants as early as

Ardhamandapa of this temple states that the above said Gurukulattharaiyan had prevented tenth century itself and a certain Acchan of that Aruvaivanikacchri had made an endowment of fiftyfive sheep to the temple of Kutthankudi Sunaikkudi Padarar, for burning a perpetual lamp. An inscription at Venugopalaswamy temple dating back to the period of the great chola king Rajaraja I (1006A.D.,) records certain land donation made by the Nagaratthar of Kutthankudi, Another inscription of Rajaraja period also records an endowment most probably by the merchant guild Thisaiyayiratthainnutruvar for the drummers. The above said inscriptions are good proof for the fact that this village was an important merchantile centre of this region.

KOTTHANERI

At Kotthaneri, some memorial stone inscriptions are found outside the village .One slab was installed in memory of a certain Gopalanayakkar whose image is depicted with a sward in his hand. Another stone inscription records the name of a certain Subbaiya Nayakkar whose image is noticed in the anjali pose. Other two memorial stones were erected in memory of certain ladies. Cellatthammal wife of Mariyappan hailed from Kavundampatty, and chinnamariammal wife of Gopalanayakkar son of Mutthappa Nayakkar belonging to Kavundampathy village were remembered by these memorial stone.

MANAKACCERY(T)

Thadankanni Manakaccheri popularly known as T. Manakaccheri is located in between Sivakasi and Srivilliputhur. An inscription datable to 13th A.D., noticed near a well of this village records that Venbilnattar, Karunilakkudinattar, Irunjonattar, Arinattar, Venbaikudinattar and Thirumallinattar collectively took steps of protection (Asiriyam) . Below the text of this inscription certain tools have been carved. Another inscription of the same period noticed near the Irulappaswamy temple records the pretection given to Kualsekarapuram by a local cheif known by the name Perumal Atkondapillai Malai kathakandar.

CHOLAPURAM

Utthamacholachadhurvedimangalam now popularly known as Cholapuram is located at a distance of 20 kms from Srivilliputhur on the road from Srivilliputhur to Thirunelveli. Since we get microlithic tools on the banks of Devi river, it is clear that this place had human settlements from that early period itself. Further the availability of Black and Redware potteries and megalithic urnburials in this area, prove beyond doubt the presence of Sangam period settlements in this area. Here in this village both shiva (Vikkiramapandisvaramudaiyar temple) and vishnu temples (Utthamachola vinnagar alwar alias Venkadajalapathy temple)are notable ones. The outer entrance of the shiva temple was built by the name of the Pandya rular Sundarapandya and the inner entrance was built by the name 'Thambhikku Nallan Thiruvayil'. The door jamb of the second gopura was built by Udhaiyan udaiyan alias Sundarapandyappallavarayan. The stone mandapa located in front of the Natarajar mandapam was built by certain Periyan perumal alias Venavudaiyar of Pirambilur. The stone pillars of this mandapa were donated by a number of individuals. Sadaiya mandhirikal of Cholakulandhakapuram, Sothisutriyan alias

Sundarappperumal a native of Nangur, Dhanmapalan, Pallisuryan alias Soman Devan from Nangur, Selan of Arasur and Uyyaneri katthan alias Udaiyan Umaiyan were certain donars traceable from the inscriptions. Among the donars of the pillars certain Bhattan by name Dhanabalan who is said to have hailed from Konangur made this donation as a votive offering, to thank God for having blessed him with a son whose name is recorded in the inscription as Udanpirappalagiyan. Certain tax was levied on the sale of garments sold in Cholapurm ,Mudivalangupandian, Kundratthur, Irandu sollathan, Sethurama kurichi, Samandhan kandanveerasinganallur, and Pandyadevakuricchi and that tax amount was donated to the temple . The amount collected by this donation was utilised for the maintenance of the temple building sturctures and for the repair works as per the decision taken by the above said villagers.

An inscription dating back to Kulasekara pandya (1561 AD)of Thenkasi pandya dynasty records that a certain Urudaiya mudhali alias Veerapandi Sudikkoduttha Mudhali,who was a madappathiyam of Thiruvalavayudaiyar koyil at Madurai, was appointed as the temple accountant of Veerapandisvaramudaiyar temple as per the orders of the prince Alaganperumal Adhiveeraraman. According to another inscription of Kulasekaran alias Parakirama pandiyan (1573AD) of the same dynasty, a certain Bhattar, Alagar a kaikkola of the Vasudevanallur temple was appointed as the Madappathiyam in the Vikkiramapandisvaramudaiyar temple, and for his service he was given 2 ma of land that can be utilized hereditorily by his family.

An inscriptions of Jatavarman Parakirmadeva (1322 A.D.,) records a sale of land comprising certain Sakkaraneri, which was located on the southern quarter of Thaniyanai Virapandia chathurvedimangalam, a Brahmadeya in Arinadu, as Karanmaicchenmum to a certain Suriyadevan Thambikku Nalla perumal alias Pillai Sundarapandya vanakovaraiyar an Akapparivara Mudhali of the ruler hailed from Arukkkaikundrathur in Anmanadu and as Vadakkadamai to the Cholapuram Shiva temple by the mahashabhai of the above said Chathurvedhmangalam. Another inscription records the grant of a certain land by the king (Konerinmaikondan) to this shiva temple, after purchasing it from Sundarapandya Vanakovaraiyar as Karpuravilai for a sum of 1000 panam. to meet out the expenses of a festival instituted after the name of the king and the expenses of food and other offerings of the daily worship. In this manner the shiva temple built in the name of Maravarman Vikkiramapandiyan (1250-78A.D.) was a popular saivite religious centre in this area.

The Venkadachalapathi temple built in the name of the Kulothunga chola - II was popularly known in this area by the name Uthama Chola Vinnagaram during thirteen century.

An inscription records that a certain Veeran Kalankariyan alias Venavudaiyar had built certain portions of this temple. A mandapa by name Cheranarayanam Thirumandapam also was built within the temple in the thirteenth century. From the inscription it is also known that villages like Velliyarai nallur, Thirucchelur, Amanputhur, Kondaiyarneri, Upanayamangalam were granted to this Utthamachola Vinnagar Alwar temple. Certain land gift was made to this temple during the period of the Yemmandalamum Kondaruliya Kulasekara Pandya to the meet out the expenses of the worship of the Mannar and Nachiyar images of this temple.

MUDHUKUDI

A hero stone inscription dating back to thirty fourth regnal year of Maravarman Kulasekara Pandya - I (1302 A.D.) has been noticed at Mudhukudi village which is located on the road from Rajapalayam to Cholapuram. The hero Periya Devapallan, a guard of Karunkulam tank, located northwest of Mudhukudi village, had sacrificed his life while protecting the villages from the floods that occured due to the embankment of the tank. In memory of his sacrifice this hero stone has been erected and 1/2 ma of land was donated to his daughter as Udhirappatti.

PUDHUPALAYAM (RAJAPALAYAM)

Pudhuppalayam which is at present a part of the Rajapalayam Municipality was popularly known by the name Karunkulam alias Sadhavasaganallur around thirteenth century A.D.,. The Shiva temple of this area, Parannankattharuruliya swamy temple is in exsitence from the thirteenth century. Here in this village a mutt was established in the name of Oruvarunarndhan Yenakkunalla perumal a resident of Rajavallipuram. To feed the disciples of this mt, and Isana Dheva, who belonged to the Thiruvarur Krishna Glaki mutt, the Pandya ruler Maravarman Sundara Pandya II had donated twelve ma of land as madappuram. Some other inscriptions of this temple are also endowment records of land gifts to this mutt. From this it is clear that this mutt was very popular in this area during the later pandya period. From an inscription noticed in the lintel of the entrance we come to know that the doorframe and the steps of this temple were built by a certain Valvalla Panyadevan.

DEVADHANAM

Devadhanam located on the highway from Madurai to Senkottai is a well known microlithic centre. The availability of a number of urn burials in this area is a good evidence for the sangam period settlements. The Shiva temple of this villages is locted near the foothills of the western ghats and that area is pointed out by the name Bhagavanparai of Semmaram alias Kulasekarapuram in Anmarnadu. Hence the name of the deity as noticed in the early inscription is Udaiyar Thirubhagavanparai Aludaiyanayanar Sixteenth Century onwards the deity of this temple is popularly known by the name Nachadai thavittha Nayanar . This temple seems to have been constructed during the Early Pandya Period,and had undergone renovation during the thirteenth century. As noticed in the inscriptions Srivallaba Pandya had institued a special puja by name Akavaraman Sandhi and for the expenses of this special puja, he had endowed certain lands also to the temple. Parakrama Pandya had made certain land endowments to this temple to meet out expenses of a certain morning puja (kalai sandhi) instituted by him. Urudaiya Mudhali alias Veerapandiyathevar was appointed as Madapatthiyakanakkar (Accountant) around (1554-A.D.) He was brought to this temple from Alavayudaiyar temple at Madurai.

த.நா.அ. தொல்லியல்துறை தொடர் எண் : 220/2005

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	:	இல்லை
வட்டம்	:	விருதுநகர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி.12 ஆம் நூ.ஆ.
ஊர்		சோரம்பட்டி	இந்தியக் கல்வெட்டு: ஆண்டு அறிக்கை		
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ்	ஊர்க்கல்வெட்டு		
அரசு	:	இல்லை	எண்	:	1
மன்னன்	:	இல்லை			

இடம்	:	இவ்வூரிலிருந்து முத்துலிங்காபுரம் செல்லும் சாலையில் உள்ள ஈசுவரன் கோயிலில் நடப்பட்ட கல்.
குறிப்புரை	:	கருநிலக்குடி நாட்டுத் திசைச் சுடர்மங்கலத்து குடியன் குறிச்சன் என்பவன் நினைவாக நடப்பட்ட கல். இக்கல்லின் மேல்ப்பகுதியில் திரிசூலம் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

1. ஸ்ரீ கருநிலக்குடி
2. நாட்டு திசைச்
3. சுடர் மங்கல
4. த்துக் குடியந்
5. குறிச்சநுக்கு கூற்
6. செகுத்து தலைநீர்
7. அமிஞ்ச கல்

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் :** 221/2005

மாவட்டம்	:	விருதுநகர்	**ஆட்சி ஆண்டு**	:	இல்லை
வட்டம்	:	விருதுநகர்	**வரலாற்று ஆண்டு**	:	கி.பி.12 ஆம் நூ.ஆ.
ஊர்	:	காரிசேரி	**இந்தியக்கல்வெட்டு: ஆண்டு அறிக்கை**		
மொழி	:	தமிழ்	**முன் பதிப்பு**	:	
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பாண்டியர்	**ஊர்க்கல்வெட்டு**		
மன்னன்	:	பாண்டியர்	**எண்**	:	1

இடம் : இவ்வூர் லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் முன்புள்ள செக்கு.

குறிப்புரை : வீரதச்சன் என்பவன் காரியின் பேரில் செய்த செக்கினைக் குறிக்கிறது.

கல்வெட்டு

1. ஸ்ரீ காரி பேரி

2. ல் அரியான்வி

3. ல் மடை வீரதச்

4. சன் [இடுவிச்ச] செக்

5. கு உ

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	சிவகாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி.1119
ஊர்	:	திருத்தங்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	543 / 1922
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ்	ஊர்க்கல்வெட்டு எண்	:	1
அரசு	:	பாண்டியர்			
மன்னன்	:	குலசேகரன்			

இடம் : நின்ற நாராயணப் பெருமாள் கோயில் முன்மண்டபம் வடசுவர்.

குறிப்புரை : பாண்டியமன்னன் குலசேகரன் பெயரால் 'குலசேகரச் சதுர்வேதிமங்கலம்' என்னும் சதுர்வேதி மங்கலம் ஒன்று உருவாக்கப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ பூவின்கிழத்தி மேவ வீற்றிருப்ப மேதினி மாதுநீதியிற் புணர போர்மடந்தை [த ஜய]
2. ப் புயத்திருப்ப மாக்கலை மடந்தை வாக்கினில் விளங்கத் திசையிரு நான் [கு] மிசை நிலா வெறி [ப்பமறை]
3. ற நெறிவளர மனு நெறி திகழ வற நெறிச் சமை யங்களாறுந் தழைப்பக் கான வேங்கையை வில் [லுடன்]
4. துரந்து மீனங் கனகாசனத்து வீற்றிருப்ப எண்கிரி சூழ்ந்து வேழ்கட [வே]லழ் பொழில் வெண் கு [டை...] நிழற்றச் செங்கோ
5. ல் நடப்ப கொடுங்கலி நடுங்கி நெடும் பிலத் தொளிப்ப வில்லவர் செம்பியர் விராடவர் பல்லவர் திறையுடன் [முறை...] முறை பணிய இருநேமிய
6. ளவு மொரு நேமி வோங்க வின்னமுதாகிய வியலிசை நாடக மன்னி வளர மணிமுடி சூடி விளங்கிய மணியணி வீரஸிம் [ஹா ஸனத்து...] வீற்றிருந்தருளிய
7. ஸ்ரீ கோச்சடைய பன்மரான த்ரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீ குலசேகரதெவற்கு யாண்டு ஒன்பதாவது நாளிருநூற்றொருபத் தாறினால்
8. மதுரோதைய வளநாட்டு மாடக்குளக்கீழ் மதுரை க் கோயிற் பள்ளியறைக் கூடத்துப்பள்ளி
9. ப் பீடங் காலிங்கராயனி லெழுந்தருளியிருந்து குலசேகரச்சதுவெ்திமங்கலத்துஸபை யார் செய்யத் திருவாய் மொழிந்தருளினப
10. டி வேதமும் ஸாஸ்த்ரமும் போய் பூர்த்தியாதர்களாயிருக்குஞ் சதுர்வேதிபட்டர்கள் பேர் ஐம்பத்து நால்வர்க்கு ப்ரஹ்மதெயமாக்க
11. ரு நிலக்குடி நாட்டுத் திருத்தங்கால் திருமலை மேல் நின்றருளிய பரமஸ்வாமிகள் தேவதான மிந் நாட்டுத் திருப்பனை யூரு மிவ்வூற் பா
12. ற் பொற் கொடி புதுக்குளமுந்திறப்பூ இருஞ்சோணாட் டுக்குமண மங்கலமுஞ் சேந்த மங்கலமுமாக இவ்வூர்கள் நான் கெல்லைக்கு

13. ட் பட்ட நீர் நிலமுங்கருஞ் செய்புன்செய்யும் நத்தமு முப்பட்ட நிலமுன்னுடையாரும் பழம் பேருந் தவிர்ந்து ஒருரொரு புறவாக் கிய பனையூ.

14. ற் பாற் புகலோக கண்ட நல்லூரென்று பேர் கூவப் பட்ட நத்தத்திலே குடியிருப்பாராகவும் ஒன்பதாவது முதல் கருநிலக்குடி நாட்டு.

15. க்குலஸேகரச்சதுவெ்திமங்கல மென்னும் பேரால் ஸ்ரூஹஸெயஞ் செய்யப் பெறவேணு மென்று ஐயன் காலிங்கராயன் [நமக்குச் சொ]

16. ன்னமையிலிப்பேற்கு இப்பனையூற் பாற்புக லோக கண்ட நல்லூரென்று பேர் கூவப்பட்ட

17. நத்தத்திலே குடியிருப்பாராகவு மிவ்வூர்கள் நான்கு எல்லைக்குட்பட்ட நீர்நிலமுங்கருஞ் செய் புன்செய்.

18. நில முன்னுடையாரும் பழம் பேருந்தவிர்த்து ஒருரொரு புரவாக்கி இவ்வாண்டு முதல் கருநீலக்குடிநாட்டுக்குலசேகரச் சது

19. வெ்தி மங்கல மென்னும் பேரால் பங்கும் மனையுமெழுதி ஸ்ரூஹஸெயஞ் செய்து வரியிலா ரெழுத்திட்ட வுள்வரியும் நம்மோ லையு

20. ந்தரச் சொன்னோம் இப்படிக் கைக்கொண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டுவித்துக்கொள்க வென்று திருவாய்மொழி.

21. ந்தருளினார் இவை திருவழுதி வளநாட்டுக் கற்குறிச்சியான ராசராச நல்லூர் ஆஞ்சனேயன் தேர் பொலிய நின்றானான வழுதி நாராயண மூவேந்தவேள

22. ா ன் எழுத்து இவை மிழலைக் கூற்றத்துக் கீழ்க்கூற்று பழங்குன்றத்து விளத்தூருடை யானாட்கொண்டானரங்கனான சேதி ராயன் எ

23. முத்து இவை அண்டநாட்டு பெருமணலூர் மந்திரி ஆ சிங்க தேவனெழுத்து

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: இல்லை
வட்டம்	:	சிவகாசி	வரலாற்று ஆண்டு	: இல்லை
ஊர்		திருத்தங்கல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 544/1922
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
மன்னன்	:	-	எண்	: 2

இடம் : நின்ற நாராயணப்பெருமாள் கோயில் மகாமண்டபம் வடசுவர்.

குறிப்புரை : கருநிலக்குடி நாட்டிலமைந்திருந்த திருப்பனையூர் பொற்குடி புதுக்குளம், இருஞ்சோணாட்டு குமணமங்கலம், சேந்தமங்கலம் ஆகிய ஊர்களின் நான்கெல்லைகளுக்குட்பட்ட நிலப்பகுதிகள் ஓரூர் ஒரு புரவாக்கப்பட்டுப் பழம்பெயர் நீக்கிப் பனையூர் பால் புகலோக கண்டநல்லூர் என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளன. இப்புகலோக கண்ட நல்லூர் நத்தத்திலே குடியிருப்போராகவும், நிலம் முன்னுடையோராகவும் இருந்தவர்களுக்குப் பழம் பெயர் தவிர்த்து, குலசேகரச்சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரால் பங்கும் மனையும் எழுதிப் பிரமதேயம் செய்யப்பட்டமையாக இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

1. ஸ்ரீ தி ஹு வனச் சகூ வத்தி கோ நேரின்மை கொண்டான் கருநிலக்குடி நாட்டு குலசேகர சது வெ மங்கலத்து ஸ ஹையார்க்கு வேஶ மும்.
2. ஸா ஷு மும் போய் வ ர்வ தர்களாயிருக் குஞ் சதுவெதி ஹட்டர்கள் பேர் ஜம்பத்து நால்வற்கு ஷ ஹெயமாகக் கருநிலக்குடி நாட்டுத் திருத்தங்காற் திரும
3. லை மேல் நின்றருளின பரமஸ்வாமிகள் தேவதானமிந் நாட்டுத் திருப்பனையூற் பொற்கொடி புதுக்குளமுந்திறம்பு இருஞ் சோனாட்டு குமணமங்
4. கலமுஞ் சேர்ந்த மங்கலமும் ஆக இவ்வூர்கள் நாங்கெல்லைக்குட்பட்ட நீர்நிலமுங் கருஞ்செய் புன்செய்யு நத்தமுமுட்பட்டநிலம் முன்னுடையாரும் பழம் பேருந் தவி
5. ர்த்து ஓரூரொரு புரவாக்கிப் பனையூற்பால் புகலோக கண்ட நல்லூரென்று பேர் கூவப்பட்ட நத்தத்திலே குடியிருப்பாரா கவும் ஒன்பதாவது முதலிந்
6. நாட்டுக் குல ஶேவரச்சதுவெதி மங்கல மென்னும் பேரால் ஷ ஹெயஞ் செய்யப் பெற வேணு மென்று ஐய்யன் . . . . காலிங்கரா
7. யர் நமக்குச் சொன்னமையில் இப்பேற்கு இப்பனையூற்பால் புகலோக கண்ட நல்லூரென்று பேர் கூவப்பட்ட நத்தத்திலே குடியிருப்பாராகவுமிவ்
8. வூர்கள் நான்கெல்லைக்குட்பட்ட நீர் நில முங்கருஞ்செய் புன் செய்யுந் நந்தமு முட்பட்ட நிலம்முன்னுடை யாரும் பழம் பேருந் தவிர்த்து ஓரூரொ

9. ரு புரவாக்கி இவ்வாண்டு முதல் இந்நாட்டுக் குலசேவரச்சதுவெழி மங்கலமென்னும் பேராற் பங்கும் மனையும் எழுதி கே

10. ழ்வியும் வரியிலா ரெழுத்திட்ட உள்வரியுந் தரச் சொன்னோம். இப்படிகைக் கொண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்கஉ

11. இவை கேரள சிங்க வளநாட்டு வெளியாற் றூருடையான் ஸ்ரீவல்லவன் ஸ்ரீகயிலா ய முடையானானதியாகா பரண மூவேந்த வேளான் எழுத்து

12. இவை கேரளசிங்க வளநாட்டு வெளியாற்றூ ருடையான் பொன்னம்பலக் கூத்தன் திருத்தளியான் விக்கிரம பாண்டியக் கலிங்கதரையன் எழுத்து.

13. இவை அண்டநாட்டுப் பெருமணலூர் மந்திரி ஆதிச்ச தேவனான பல்லவராயன் எழுத்து

2. திருவீதியுமாய் அனுபவித்துப் போந்த திருவிடையாட்ட மாய் உள்ள பற்றும் எங்களூர் நத்தத்தில் இந் நாயினார் திருவிடையாட்டம்ாய் உள்ள பற்றும் அரச நாராயணன் பெருந்தெருவுக்கும் இத் தோட்டக் கொல்லைக்கு நான்கெல்லையிலும் நாட்டின திருவாழிக் கல்லுமுட்பட்ட நத்தமும் தோட்டமும் பல நாமமான தேவதானத் திருவிடை யாட்டமும் தன்மதான இறையிலிகளும் நீக்கி நின்ற பற்றில் இவ்வெம் பெருமானார்க்கும் திருவிடை யாட்டமாகக் குடுத்த இவ்வூர்ப் பற்றில் விக்ரம பாண்டிஸ்வரமுடை.

3. யநாயனார் எழுந்தருளியிருந்த மேலைத் திருவீதிக்குத் தெற்கில் அகப்பரிவாரத்தாரில் மாலை என்கிறவன் மனைக்கு மேற்கு நாட்டின கல்லுக்கு கிழக்கும் இதன் செவ்வைக்கு மேற்கும் கீழைத் திருவீதியாகவும் தெற்குத் திருவீதிக்கு கண்ணுடைய பெருந்தெருவில் ஆண்டபிள்ளை மனைக்கு வடக்கு நாட்டின கல்லுக்கு கீழை மேல் போன செவ்வைக்கு வடக்கு மடமும் மனையும் நீக்கிக் குடுத்த நத்தமும் நீக்கிநின்ற நத்தமும் நத்தப் பாளுந் தோட்டமும் தோட்டக் கொல்லைகளும் குளமும் குளப்பரிப்பும் காடும் நன்செயும் புன்செயும் மரமும் கிணறும் தானப்பற்றும்

4. மற்று மேப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் உடையார் விக்ரமபாண்டீஸ்வரமுடைய நாயனாற்கு அம்மான் தொண்டைமானார் கோயிலில் ஏழாவது பங்குனி மாதம் முதல் குடி நீங்கா தேவதான மாகத் தந்து இப்பற்று பசானம் சிறு கொடையான பயிர் புன்பயிர் மற்றும் தான் வேண்டும் பயிர் பார்த்துக் கொள்ள இத்தால் வரும் கடமை வினியோகம் அந்தராயம் வெட்டிப்பாட்டம் பஞ்சுபீலி சந்திவிக்கிரப் பேறு வாசல் வினியோகம் காரியவாராட்சி இலாஞ்சினை பேறு நந்தப் பச்சை பிள்ளையார் நோன்பித் தேவை ஆனைச்சாலை குதிரைப் பந்தி....

5. கால் தேவை வீட்டுத் தேவை புற உடல் பொ[ன்வரி] இனவரி ஆள்வரி மனைவரி தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்ப்பாட்டம் பாசிப்பாட்டம் மற்றும் மெப்பேற்பட்ட அனைத்து உபாதிகளும் உட்பட இந்நாள் முதல் தேவதான இறையிலியாக தந்து வரியிலார் கணக்கிலும் கழிக்கச் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு வேண்டுமிடங்களில் திருசூலத்தாபனமும் பண்ணிக் கொண்டு சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க இவை திருவரம்பூருடையான் எழுத்து இவை வீரபாண்டிய பல்லவராயன் எழுத்து...நாள் ஆயிரத்து நூற்று அறுப... இந்த சிலா சாசனம் எழுதினேன். நாயனான வீரவினோத ஆசாரியனேன்

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: சகம் 1483 கி.பி.1561
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 483 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	தென்காசிப்பாண்டியர் ஊர்க்கல்வெட்டு		
அரசன்	:	குலசேகரன்	எண்	: 17
இடம்	:	அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர் (ஜகதிக் கல்வெட்டு)		
குறிப்புரை	:	அழகன் பெருமாள் அதிவீரராமனின் ஆணைப்படி மதுரையிலுள்ள திருவாலவாயுடையார் கோயிலில் மாடாபத்தியமாக இருந்துவந்த ஊருடைய முதலியான வீரபாண்டி சூடிக்கொடுத்த முதலி என்பவர் வீரபாண்டீசுவர முடையார் கோயிலில் சீபண்டாரக் கணக்காகப் பணிபுரிந்துள்ளார். இவருக்கு ஆன்மர் நாட்டு சோலைசேரி முடிவிளங்கு பாண்டிய குளப்பற்றில் காணியாட்சியாக ஒரு மா நிலமும் வழங்கப்பட்டுள்ளது.		

கல்வெட்டு :

1. ஸ்ரீமன் மஹா மண்டலேஸ்வரன் அரியராயதளவிபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் ஸ்வஸ்தி ஸாஸனம் ஸ்ரீமத் ஸம்ஹாரவிக்ரம வாண்டுதிஸ்வரஸ் காரணம் ஸகாஷ்ட ஆசாரிய நன் மேற் செல்லா நின்ற ஸங்கராரர தன்மைப் பெருமாள் குலசேகர தேவற்கு

2. யாண்டு ௰௩ஆவது துன்மதிவருஷத்து உத்ஷிணாயனத்து வஷ்டிகாஸிரவி ௰௬ தேய்தியும் ஸுக்ல பக்ஷத்து தசமியும் ப்ருஹஸ்பதி வாரமும் ஸுக்ல யோகமும் ஷஹ காரணமும் பெற்ற உத்திராடத்து நாள் ஸங்கராரர தனூப் பெருமாள் குலசேகர தேவற் நநரார

3. அழகன் பெருமாள் அதிவீரராமன் நம்மாலயத்தில் தானிகர் கணக்கற்கு ஓலைவரக் காட்டுகையில் மதுரை உதைய வளநாட்டு மாடைக் குளத்தின்கீழ் மதுரையில் திருவால வாயுடையார் கோயிலில் மாடா பத்தியம் ஊருடைய முதலியான் வீரபாண்டி.

4. சூடிக் கொடுத்த முதலிக்கு நம்மாலயத்துச் சீபாண்டாரக் கணக்குக் காணியாட்சையாகக் கொடுத்த நிலம் ஒரு மாவுக்கு ஆண்மரை நாட்டு சோலை சேரி முடிவிளங்கும் பாண்டியன் குளப்பற்றில் நிலம் ஒருமா இந்நிலம் ஒருமாவும் மாதம்ஒன்றுக்கு இரண்டு.

5. கோட்டை நெல்லும் இரண்டு பணம் நாள் ஒன்றுக்கு இருநாழி சோறும் மற்றும் அசல் கணக்குக் கொத்த சுதந்திரங்களும் பற்றிக் கொண்டு இன்னாள் முதலுக்கு ஆசந்த்ராதித்தவரை ஸந்ததி ப்ர வேசம் செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கைய்யாண்டு கொள்ளவும் ஸ்ரீமன் மஹா ஸ்வரர் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 326/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 24
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: சகம் 1509 - கி.பி. 1587
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 484 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழும் கிரந்தமும்		
அரசு	:	தென்காசிப் பாண்டியர் ஊர்க்கல்வெட்டு		
அரசன்	:	அதிவீரராமனான ஸ்ரீவல்லபன்	எண்	: 18
இடம்	:	அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் கருவறை வடக்கு மற்றும் மேற்கில் உள்ளது.		
குறிப்புரை	:	முற்றுப் பெறாத கல்வெட்டு. கிரந்த எழுத்தில் தொடங்கும் இக்கல்வெட்டு மன்னன் பெயர் மற்றும் ஆண்டு கூறுவதுடன் நின்றுவிடுகின்றது.		

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்வஸ்தி ஸ்ரீ ஜெயாப்யுதய சாலிவாஹன சகாப்த ஸஹஸ்ர காரணத்ய ஸாவநம் ஸா . . . . .

2.விக்ரமாணி ஸ்வர ஸ காரணாதி ஸகாப்த த்ருாசு மேல்ச் சொல்லா நின்ற ஸங்கராந்த

3. பெருமாள் அதிவீரராமந ஆன சிவல தேவருக்கு ஆண்டு உயசவது சவசி ஸ்ரீவது உ . . . .

4.த்து

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 36
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1303 - 04
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 490 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	குலசேகர தேவன்	எண்	: 19

இடம் : அருள்மிகு விக்கிரம பாண்டீசுவர முடையார் திருக்கோயில் இரண்டாம் கோபுரம் [உள்கோபுரம்] தெற்கு கிழக்கில் உள்ளது.

குறிப்புரை : சோழபுரத்திலுள்ள விக்கிரமபாண்டிய ஈசுவரமுடையார் கோயில் திருப்பணிக்காக வேண்டி சோழபுரம் முடிவழங்கு பாண்டியன் குன்றத்தூர் இரண்டு சொல்லாதான் சேதுராமக் குறிச்சி சாமாந்த கண்டன் வீரசிங்க நல்லூர் பாண்டிய தேவ குறிச்சி போன்ற பல ஊர்களைச் சேர்ந்த ஊரும் காரணவரும் தாங்கள் விற்கின்ற புடவையுரு வொன்றுக்கு காணிப்பணம் அளிக்க இசைந்ததைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவன சக்ரவத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு ௩௰௬வது மார்கழி மாதம் ஆண்மர் நாட்டு சோழபுரத்து உடையார் விகரமபாண்டிஸ்வரமுடைய நாயனார் கோயில் திருப்பணிக்கு இவ்வூர் கண்ணுடைப் பெ

2. ருந் தெருவுள்ளிட்ட ஊரும் காரணவரோமும் முடிவழங்கு பாண்டியனில் ஊரும் காரணவ ரோமும் முழுதுமாய்க் குடியுள்ளிட்ட ஊரும் காரணவோமும் குன்றத்தூர் இரண்டு சொல்லாதான் சேதுராமக் குறிச்சி சாமந் தாண்டான் வீரசிங்க நல்லூர் பாண்டிய தேவகுறிச்சி இவ்வூர்களில் ஊரும் காரணவ

3. ரோமும் எம்மிலிசைந்து இந் நாயனார்க்கு நாங்கள் விக்கும் புடவையுருவொன்றுக்கு காணிப்பணமாக வைத்து புறவூர்களிலே நின்று வந்து விக்கும் மவர்களும் இப்பணம் குடுப்பதாகச் சம்மதித்து இது சந்திராதித்தவ செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் குடுத்தோம் இவ்வூரர்.

4. னை வரோமும் காணியரோமும் உடையார் விக்ரமபாண்டி ஸவரமுடைய நாயனாற்கு இவை வழுதிகோன் எழுத்து இவை பாண்டிக் கோன் எழுத்து இவை அளகைக் கோன் எழுத்து இவை வளவக்கோன் எழுத்து இவை சுந்தர செண்டிலை ராமன் எழுத்து இவை தமிழ்கோன் எழுத்து இவை தென்னவகோன் எழுத்து இவை விக்கிரம பாண்டிய மாராயன் எழுத்து இவை காழி ஞானசம்பந்தன் எழுத்து இவை திரி புவன சிங்கதேவன் எழுத்து.

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 2
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: சகம் 1495 கி.பி.1573
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 482 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ், கிரந்தம்		
அரசு	:	தென்காசிப் பாண்டியர் ஊர்க்கல்வெட்டு		
அரசன்	:	குலசேகரன் என்ற பராக்கிரம பாண்டியன்	எண்	: 20
இடம்	:	அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் கருவறை வடக்குச் சுவர்ப் பகுதி		
குறிப்புரை	:	விக்கிரம பாண்டீசுவரமுடையார் திருக்கோயிலில் மாடாபத்தியமாக ஆரிய நாட்டிலிருந்த வாசுதேவ நல்லூர் சிந்தாமணி நாதன் கோயில் கைக்கோளரில் பட்டர் அழகர் என்பவர் நியமிக்கப்பட்டு அவருக்கு மாடாபத்தியக் கணக்கு காணியாட்சியாக 2 மா நிலம் வழங்கப்பட்டிருந்தமையைத் தெரிவிக்கிறது.		

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்வஸ்தி ஜெயெச வகதுதை லொகூ நெசாணதாண ஸஂஹாா காரணஜ ஸாவஸநம் ஸா .....
2. ஸநஂ ஸாஸ்தம் ஸஂஹோவிகூஉ வாஸ்ரீஸ்வ ஸஂகாரணஜ ஸகாஸூஜ ஆசாகூய
3. ருன் மேல் செல்லா நின்ற நஂகூஉாரு கூலெசேகரப் பெருமாளான பராக்கிரம மாறற் அழ
4. கிய சொக்கனாற்கு யாண்டு உவது ஸ்ரீஉகூ ஸூத்து உக்ஷணாயநதது வரு ஷ
5. த்து விருச்சிக மாதத்து சாந்தியதியும் சுக்கில பக்ஷத்து தசமியும் ஆதிவார
6. ரீஉ ஸஂகயோகமும் நாகரிகரணமும் பெற்ற உகூதது நாள் நஂகூஉாரு பரா
7. கூஉ உா றன் அழகிய சொக்கனார் நம்மாலயத்தில் தானிகர் கணக்கர் ஓலை வரக்காட்டு
8. கையில் ஆரியனாட்டு வாசுதேவ நல்லூரில் சிந்தாமணி நாதன் கோயில்
9. கைக் கோளரில் பட்டர் அழகனுக்கு நம்மாலையத்தில் மாடா பத்தியமும் மாடா
10. பத்தியக் கணக்கு காணியாட்சையாகக் குடுத்த நிலம் இரண்டு மாவுககு ஆண்மர் நாட்
11. டு சோலை சேரிப் பற்றில் முடி விளங்கும்பாண்டியன் குளப்பற்றில் நிலம் ஒரு மாவு
12. ம் இன்னிலம் ஒரு மாவும் மாதம் ஒன்றுக்கு நாலு கோட்டை நெல்லும் நாலு பணத்துக்
13. கும் இரண்டு கோட்டை நெல்லும் இரண்டு பணமும் நாள் ஒன்றுக்கு நானாழி சோற்றுக்கு இ
14. ரு நாழி சோறும் மற்றும் அசல் தாணிகர் கணக்கருக் கோசர சுவந்திரங்களும் பற்றிக் கொ
15. ண்டு இன்னாள் முதலுக்கு ஆசந்திராதித்தவர் சந்ததிப் ஸவேஸஉ செலையிலுஞ் செம்பிலு
16. ம் வெட்டிக் கையாண்டு கொள்ளவும் ஆதிசஸ்ரீஸ்வரு எழுத்து.

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 329/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 3
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	குலசேகரன்	எண்	: 21 (உதிரிக்கல்வெட்டு)
இடம்	:	அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் நந்திமண்டபம் நிலவறை உள் உள்ளது.		
குறிப்புரை	:	துண்டுக்கல் வெட்டாக உள்ளது. முதற்கல்வெட்டில் குலசேகர பாண்டியன் மூன்றாம் ஆட்சியாண்டில் வழங்கப்பட்ட தானம் தெரிகின்றது. இவ்விறைவர் தீர்த்தவாரிக்காக எழுந்தருளும் போது நடந்த செய்தியினைத் தெரிவிக்கின்றது. இதுபோன்ற செய்திகளை பிறதுண்டுக் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன.		

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செயல் சோழபுரத்து உடையார் வி.....
2. று.. சி மாகேசுவரர்க்கு நயினார் குலசேகர தேவற்கு மூன்றாவது....
3. ரையிலே தீர்த்தம் பிரசாதிக்க கடவதாக திருநாள் எழு.....
4. மற்றுமுள்ளிட்ட பல அழிவுகளுக்கும் சேந்தமங்கலத்தில் கு.....

நிலவறைமேல் கல்லில் காணப்படும் துண்டுக்கல்வெட்டு

1..... [யா] ண்டு முதலுக்கும் உடலாக சகர நாட்டு ஆ....

2.... டி கலால் ஐஞ்சாவது பங்குனி மாதவரையும்

3. .....ர உடை புன்பயிர் தறியிறை தட்டொலி தட்.....

தென்மேற்கு மூலை அதிட்டானம் முப்பட்டைக் குமுதம்

1. ..... நாட்டு சோழபுரத்து விக்ரம பாண்டீசுஸ்வரத்து நாய [னார்]....

2........புறமும் சுந்தரபாண்டிய தெருவோமும் திசை....

3..... பிள்ளையார்க்கு அமுது படிக்கு பரவோ பயிர் விளை....

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 330/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 38
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 498 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	குலசேகரன்	எண்	: 22
இடம்	:	அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் நுழைவுவாயிலின்மேல் நெற்றியில் உள்ள கல்வெட்டு.		
குறிப்புரை	:	செவ்விருக்கை நாட்டுக் களத்தாவூரைச் சேர்ந்த வீரன் கோலங் கரியானான வேணாவுடையான் என்பவன் இக்கோயிலில் அந்தராள மண்டபம் சோபான மண்டபம் செய்தளித்ததைக் குறிப்பிடுகின்றது.		

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலசேகரதேவற்கு யாண்டு௩௰அ வது ஆனி மாஸம் செவ்விருக்கை நாட்டுக் களத்தாவூரான ஒன்னலாதித்த நல்லூர் களத்தாவூருடையா
2. ன் வீரன் கோலங்கரியானான வேணாவுடையார் உத்தம சோழ விண்ணகர் ஆழ்வார் கோயில் அத்தமண்டபத்துக்கு கிழக்கு பெருமாளும் மன்னனாரும் எழுந்தரு
3. ளியிருக்கிற அந்தராள மண்டபமுந் திருமுன்பு மஹாமண்டபமும் சோபானமும் இவர் செய்வித்த தர்மம் ஸ்வஸ்திஸ்ரீ

த.நா.அ. தொல்லியல்துறை — தொடர் எண் : 331/2005

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 6
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: கி.பி.1258
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 494 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	வீரபாண்டியன்	எண்	: 23

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் இடதுபுறம் உள்ளது.

குறிப்புரை : உத்தமசோழ விண்ணகரெம்பெருமான் கோயில் ஸ்ரீபண்டாரிகள் உத்தமசோழச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த திருவெழுந்தூர் நாராயணன் நாராயண பட்டன் என்பவரிடமிருந்து அச்சினை(பணத்தை)ப் பெற்று கற்தச்சனிடம் கொடுத்து சேர நாராயணன் திருமண்டபத்தில் உடையார் களப்பாளர் செய்வித்த முன் மண்டபத்திருப்பணிக்கு வழங்கியமையைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிஹு வநசக்ரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய
2. தே வற்கு யாண்டு கூவது ஆண்மர் நாட்டு உத்தம சோழ விண்ணக ரெம்பெருமா
3. ன் கோயில் ஸ்ரீ பண்டாரிகளோம் உத்தமசோழ சதுர் வேதி மங்கலத்து திருவெ
4. ழுந்தூர் நாராயணான் நாராயண ஹட்டன் பக்கல் சேர நாராயணன் திருமண்டபத்தி
5. ல் உடையார் களப்பாளர் செய்வித்த முன்மண்டபத்திற்கு இவன் பக்கல் வாங்கிகற்தச்ச
6. ற்கு குடுத்த அச்சு க இவ்வச் சொன்றுக்கும் இவ்வாட் டைக் காத்திகை மாஸமுதல்வநு ாதித வ
7. வது ஸ்ரீபண்டாரத்திலே ஒடுக்கி சந்திராதித்த வரை செலுத்துவோமானமைக்கு இக்கோயி
8. லிலனு ஸந்தானம் திருவெழுந்தூர் அழகிய மணவாளஶாஸன்எழுத்து இக்கோயில் நம்பிமாரில்
9. பண்டாருத்தன் யாதவனான அழகிய மணவாள ஹட்ட னெழுத்து இப்படிக்கு இவை நாராயணன்
10. வீற்றிருந்தானான ஹட்டனெழுத்து.

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 332/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 5 + 1
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: கி.பி.1288
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 495 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	விக்கிரமன் (மாறவர்மன்)	எண்	: 24

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் இடதுபுறம் உள்ளது.

குறிப்புரை : இறைவனுக்குரிய திருவிடையாட்ட பிரம்மதேயமாக விளங்கிய உத்தம சோழச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த திருநல்லூருக்குரியவரான நாராயணன் நாராயண பட்டர் என்பவர் கோயிலில் திருநந்தா விளக்கு மற்றும் சந்தியா தீபம் எரிப்பதற்காக வேண்டி $8^1/_2$ அச்சு [பணம்] வழங்கியுள்ள மையைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவத்திகள் ஸ்ரீவிக்ரம பாண்டிய தேவற்கு
2. ஸெ ருவதின் எதிராமாண்டைப்பசி மாஸத்து முதற்றியதி ஆண்மர் நாட்டு உத்தம சோ
3. ழ விண்ணகரரெம் பெருமாள் திருவடி பிடிக்கும் பாண்டவ தூதனியாதவனான
4. அழகிய மணவாள பட்டனும் நாராயணன் வீற்றிருந்தான் பட்டனும் நாய
5. னார் திருவிடையாட்ட ப்ரஹ்மதெயம் உத்தமசோழ சதுர்வேதி மங்கலத்து நல்லூர்
6. ர் நாராயணன் நாராயண பட்டன் பக்கல் நாயனாற்கு திருநந்தா விளக்கொன்றும் செ
7. லுத்துவோமாகக் கைக் கொண்ட அச்சு ஏழரையும் ஸந்த்யாதீபமொன்று
8. க்கு கொண்ட அச்சு ஒன்றுமாக அச்சு அஜி இவ்வச்சு எட்டரையும் கைக்கொண்
9. டு இ நாள் முதல் சந்திராதித்தவற் பொலியூட்டாக செலுத்து வோமா
10. ன மைக்கு இவை பாண்டவற்தூ தனியாதவனான அழகிய மணவாள பட்டன் எழுத்து இவை
11. வ நாராயணன் வீற்றிருந்தான் ஒட்டன் எழுத்து இவ் வாட்டை இத்தியதி இந்நாயனா
12. ர் சி பண்டாரிகளோம் இத்திருநல்லூர் நாராயணன் நாராயண பட்டன் பக்கல் இ

13. ந் நாயனாற்கு இவ்விளக்கு மூன்றும் வெள்ளிக்கிழமை தோறும் தேங்கா யொன்றும் அமுது

செய்விப்போமா

14. க கைக் கொண்டு இநாயனாற்கு ஸ்ரீசுதர்ஸனமும் ஸ்ரீ பாஞ்ச சந்யமும் செய்து சாத்தினெ

15. பான்னினாலச்சு க இவ்வச்சு ஒன்றுக்குஞ்ச சந்திராதித்தவற் சி பண்டாரத்திலே ஒரு தேங்காயும் மு

[பூச்சுக்குள் மறைந்துள்ளது]

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 333/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 15 + 1
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 496 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	கோனேரின்மை கொண்டான்	எண்	: 25

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் வலதுபுறம் உள்ளது.

குறிப்புரை : ஆன்மர் நாட்டு உத்தமசோழ விண்ணகர் ஆழ்வார் கோயில் ஸ்ரீவைணவர்களுக்கு தேவதான பிரம்மதேயமாக பெரிய ஜீயரும் இளைய ஜீயரும் வழங்கிய நிலங்களிலிருந்து பிராட்டியாருக்குத் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டும் செலவினங்களைச் செய்ய வழிவகை செய்யப்பட்டிருந்தமையைப் புலப்படுத்துகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ

2. கோனேரின்மை கொண்டான் ஆண்மர் நாட்டு உத்தமசோழவிண்ணகர் ஆழ்வார் கோயிலில் ஸ்ரீ வைஷ்ணவர்

3. களுக்கு தேவதானப் பிரமதேயமாக பெரிய சீயரும் இளைய சீயரும் தந்தருளி திருவாய் கேழ்வி

4. த் திருமுகமும் புரவரியாருள்வரியும் திருச்சூலக்கல்லுள்ளிட்ட தேவதானங்களில் இறுத்து வருகிற அந்தராயமு

5.ம் வினியோகம் எழுந்தருளிவிச்சு பிராட்டிக்கும் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டுவனவுக்கு பெற வேணுமென்

6. று இவன் நமக்குச் சொன்னமையில் இவளுக்காக அந்தராயம் பதினைஞ்சாவதினெதிரமாண்டு முதல் தந்தோம் முன்பு

7. இறுக்கக் கடவ வண்ணக்க கூலி தரவு கூலி உட்பட அந்தராயமும் மற்றும் எப்பேர்ப்பட்டனவும் பதினைஞ்சா

8. வதினெதிராமாண்டு முதல்கைக் கொண்டு அமுதுபடி உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்கள் செல்லப் பண்ணுக இவை

9. வ செழியதரையனெழுத்து யாண்டு பதினைஞ் சாவதினெதி ராமாண்டு நாள் பன்னிரண்டினால் இவை உய்ய வ

10. ந்த பெருமாளெழுத்து ஸ்வஸ்திஸ்ரீ

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 4
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	ஸ்ரீவல்லபன்	எண்	: 26

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் வலப்புறம் உள்ளது (வடகிழக்கு)

குறிப்புரை : மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில் இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் விண்ணகர் எம்பெருமாளுக்கு மன்னன் பெயராலும் சபையார் பெயராலும் விடப்பட்ட குளங்கள் மற்றும் நிலத்தானங்கள் பற்றிய செய்தியினைத் தெரிவிக்கின்றது. ஏரிகளின் பெயர்களாக கொண்டனேரி சுவரனேரி போன்றனவும் தென்பிடான் குளம் ஊர்க்குளம் போன்ற குளங்களின் பெயர்களும் வாய்க்கால்களின் பெயர்களும் இவற்றின் நான்கு எல்லைப் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமடந்தையுஞ் செயமடந்தையுந் திருப்பு
2. யங்களிலினிதிருப்ப இருநிலமும் பெருமையே
3. யாக எண்டிசையுங் குடை நிழற்ற மன்னவெ
4. ரல்லாம் வந்திறைஞ்ச மரபில் வந்த மணிமுடி சூடித் தென் குமரியும் வடகெங்கையுந்
5. திரைகடலே யெல்லையாகப் பார் முழுவதுங் கயலாணை பரந்து செங்கோலுட
6. ன் வளர் மன்னிய வீரஸிம்ஹாஸனத்து உலகமுழுதுடையாளோடும் வீற்றிருந்த
7. ருளிய.. மாமு...ல் மதிக்குலம் விளக்கிய கோமுதற் கோச்சடைய பன்மரான திரிபு
8. வனச் சக்கரவத்திகள் ஸ்ரீவல்லப தேவற்குயாண்டு நாலாவது நம் பிள்ளையார்.
9. ஸ்ரீ ஸுந்தரபாண்டியதேவர் ஆண்மர் நாட்டு அறுகைக் குன்றத்தூரில் எழுந்தருளியி
10. ருக்க கோயிலுள்ளாலை பள்ளியறைக் கூடத்துப் பள்ளிக் கட்டிலிலெழுந்த
11. ருளியிருந்து இந்நாட்டு சுந்தரபாண்டிய விண்ணகராழ்வார் தேவதான ஸர்வமான்யம்
12. ஸ்ரீ சுந்தரபாண்டியச் சதுர்வேதி மங்கலத்து ஸபையார் செய்யத் திருவாய் மொழிந்தருளி
13. னபடி நம் பக்கல் தங்களுக்கு தேவதான ஸர்வமான்யமாக தந்த குளங்களுக்கு எல்லை
14. வெண்பைக்குடி நாட்டு துடையனூர் முட்டத்து திருச்சலூர்க்கு அமண் பு

15. த்தூர்க்கும் கொண்டய னேரிக்கும் கீழெல்லை காணி யாற்றில் தாழ்வேய் தெற்கு நோ

16. க்கிப் போந்த சுவரனேரி மேல் கடை கொம்பிலே ஏறிமேற்கு நோக்கிப் போந்த கவர் வா

17. ய்க்காலில் ஏறி பரப்பை வலத்து வைத்து இடத்தே மேற்கு நோக்கிப் போந்து சி வில்லி

18.புத்தூர்ப் பெருவழியே வடகிழக்கு நோக்கிப் போந்து கவர்வாய்க்காலை ஏறி வடக்கு நோ

19. க்கிப் போந்து இவற்றை வலத்து வைச்சு சண்டிக்கும் திருச்சலூர்க்கும் நடுவில்நாரா

20. சப் பெருவரம்பே வடக்கு நோக்கிப் போந்து முழிக்கரை யிலே ஏறிக்கரையே மேற்கு

21. நோக்கி திருச்சலூர்ப் புறகரையே போந்து மேல் கடைக்கொம்பிலே ஏறி இக்குளத்து

22. க்கு நீர்பாய்கிற காலை இறங்கி வடக்கு நோக்கி உள்வாய்க்கே போந்து இக்குளத்துது

23. டக்கடைக் கொம்பே ஏறிப்ப... யவலத்து வைச்சு வடமேற்கு நோக்கி போந்து

24. அமண் புத்தூர் மேல்கடைக் கொம்பிலே... வடக்கு நோக்கிப் போய்க்குளத்து நா...வக

25. ா யேரிக்கு கிழக்கு நோக்கிப் போய் தென்பிடாரன் குளத்துத் தென் கொம்பை ஏறிக்கிழக்கு நோக்கிப் ே

26. பாய் முழிரேய் வலத்து வைச்சு இடத்தே போய்... கொண்டனேரி நீர் வரக்கேய் தென்கிழக்கு

27. நோக்கிப் போந்து உசாத்திலே ஏறி நீர் குளத்து நீர் நக்கலே மேற்கு நோக்கிப் போய் காணி பற்

28. றிலே வந்து இந்நான் கெல்லைக் குள்ப்பட்ட குளங்களும் நிலமும் நத்தமும் நத்தப்பாழும்

29. இந்நாட்டு உபனயன மங்கலத்து எல்லை வேல்க் குளத்து நீர் நக்கலே தெற்கு

30. நோக்கிப் போந்து சமையப் பிராட்டி நீர் நக்கலே.... து மேல் கொ

31. ம்பில் பற்றி மேற்கு நோக்கிப் போந்து வழியே வட மேற்கு நோக்கியே வந்து உபநயன

32. மங்கலத்து மேல் கொம்பிலே ஏறிமேற்கு நோக்கிப் போந்து இக்குளத்து நீர் பாக்கி

33. ய வடக்கு நோக்கிப் போய் தாழ்வை ஏறி இத்தாழ்வை ஏறி இத்தாழ்வை வலத்து வைத்து இடத்தே கிழக்கு

34. நோக்கிப் போய் வேலங்குளத்து நீர் நக்கலே வந்து இந்நான்கெல்லைக் குள்பட்ட குளமும்

35. நிலம் நத்தமும் நத்தப்பாழும் ஆன்மர் நாட்டு வெள்ளி யறை நல்லூரான தனம்பராயன்

[தொடர்ச்சி பூச்சுக்குள் மறைந்துள்ளது]

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 335/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 7
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 496 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	-	எண்	: 27

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் வடபுறச் சுவர்ப் பகுதி.

குறிப்புரை : இக்கோயில் பண்டாரிகள் மற்றும் சபையார் பக்கல் கொடுக்கப்பட்ட நிலத்தானம் பற்றிய செய்தியினை த்தருகின்றது. இவற்றால் வந்த கடமை அந்தராயம் முதலியன இரண்டு சந்தியாதீபம் எரிக்கவும் நித்திய பூசை முதலியவற்றிற்குமாகச் செலவிடப் பணிக்கப்பட்டது. இந்நிலத்தானத்தின் நான்கெல்லைகள் சுந்தபாண்டியன் கோலால் அளக்கப்பட்ட செய்தியும் தெரிகின்றது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான..... [யா]

2. ண்டு ஏழாவது ஆண்மர் நாட்டுச் சோ [ழபுரம்]

3. கோயில்ஸ்ரீ பண்டாரிகளோம் மாஸ....

4. ச் சானி தனக்கு னோவாய் ... இந் நோவு

5. இரண்டுக்கும் இரண்டு சந்தியா தீபஞ் செ.....

6.......... பொன் கொண்டு.....

7. ப் பேரேரிக்கு கீழெல்லை இக்குளத்துக்கு கீழ்க் கொம்பிலே போந்து னேரியிலே ஏறி தெற்கு நோக்கிப் போந்து நிதிதூ

8. துக்கு கீழை வாய்காலே தெற்கு நோக்கிப் போந்து ஆற்றில் இறங்கி இவ்வாறே வடக்கு நோக்கிப் போந்து துழாய் குடிக்கு

9. நீர் பாய்கிற சுருளி அணையிலே வந்து இவ்வாறே போய் துழாய் குடிக்கும் குளத்துக்கும் நீர் பாய்கிற அணையிலும் சென்று இக்கா

10. லே கிழக்கு நோக்கிப் போந்து இக்குளத்துள் வாயில் கரையிலே ஏறி இக்குளத்து உள் வாயிலே போய் இக்குளத்துக் கடைக் கொம்

11. பிலே வந்த இந் நான்கெல்லைக்குட்பட்ட குளமும் நிலமும் நத்தமும் நத்தப்பாழும் ஆக இவஞ்சு குளமும் ஒருரொருவும் [நீ]

12. க்கி முன்னுடையூரும் பழம் பேரும் தவிர்த்து பதினாறு பேர் [க்] கு தேவதான ஸ்ரீஹெயசாக

இவ்வாண்டு முதல் தந்தோம் வீரபாண்டிய

13. ன் கோலால் நிலமொரு மாவுக்கு முதல் வீரபாண்டியந் நில மாத்தால் நாற்கல நெல்லும் கால் காசும் இவ்வாழ்வார்[க்] குத் திருப்படிமா

14. ற்றுள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு இறுத்து அனுபவிப்பதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்க வென்று தி

15. ருவாய் மொழிந்தருளினார் இப்படிக்கு இவை வெரிச்சி யூருடையானெழுத்து ஸ்வஸ்திஸ்ரீ

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 336/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 497 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	கோனேரின்மை கொண்டான்	எண்	: 28
இடம்	:	அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் வடபுறச்சுவர்		
குறிப்புரை	:	இவ்வூர்ச் சபையார் இவ்விறைவர்க்கு விட்ட தேவதானச் செய்தியினைத் தெரிவிக்கின்றது. இத்தேவதான நிலமும் தன்மநாராயணப் பேரேரி கொண்டயனேரி முதலிய ஏரிகளும் குளங்களும் தானமாக வழங்கப்பட்டன. இவற்றின் நிர்வாகம் இருபது நபர்களுக்கு கொடுக்கப்பட்டு நிருவகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தானம் நடைபெறாதிருந்ததை மன்னனின் பெயரனின் காலத்தில் பெயர் மாற்றி உத்தமசோழச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் மாற்றித் தேவதானமாக விடப்பட்டது என்ற செய்தி வருகின்றது.		

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரி புவனசக்கரவத்திகள் கோனேரின்மை கொண்

2. டான் சோழபுரத்து உத்தம சோழ விண்ணகர் ஆழ்வார் தேவதானம் உத்தம சோழச் சதுர்வேதி மங்கலத்து ஸபையோம்....

3. க்கு இவ்வாழ்வார் தேவதானம் ஆண்மர் நாட்டு வெள்ளி யறை நல்லூரான தன்மராயனப் பேரேரியும் துடையனூர் முட்டத்

4. து திருச்சேலூரும் அமண் புத்தூரும் கொண்டயனேரியும் உபநயன மங்கலமும் பெரிய அப்பாட்டக்காலிலும் நூறு

5. கிழக்கு காணியாத்துக்கு இரு..... படின படிக்குள்வரி புரவரி யானைவரியும் அந்தராயம் அப்பாட்டக்கு தினமும் பெற்று சுந்தரபாண்டிய

6. ச் சதுர் வேதி மங்கல மென்று அனுபவிச்சுப் போந்து பின்பு ஸூஹிசமுகாஸாயையுமிக்குத் தங்கள் குடிபோனமையில் இக்கு

7. ளங்கள் பாழாய் பக்கல் யெழுந்து நடந்து திருவாரா தனமும் முட்டிக் கிடந்தமையில் பேரனார் உத்தம சோழ

8. ச் சதுர் வேதி மங்கல மென்று இருபது பேர்க்கு கிரயம் எழுதியவிடத்தும் குளங்களும் கல்லுவித்து நிலமும் காடு வெ

9. ட்டிக் கைக் கொண்டனுபவித்து வந்ததாக இப்படிக்கு நாம் மோனரயம் பேர் வேணுமென்று விரத முடித்த பெருமாள் சொல்லுகையி

10. ல் இப்படி தேவதான மாகத் தரச் சொன்னோம் இக்குளங்களு முள்ளிட்ட... பேரு மிவ்வள் ஆழ்வார்க்கு பண்டாண்டு பழநடை கடமை

11. இறுத்து அனுபவிக்க இவை மளவராயன் எழுத்து இவை வயனாட்டராயனெழுத்து இவை பல்லவராய னெழுத்து யாண்டு

12. பதின் மூன்றாவது நாள் ஆயிரத்தொரு நூற்றொருபத் தொன்பதினால் ஆசாரஞ் செய்தருளித்து ஸ்வஸ்திஸ்ரீ

த.நா.அ. தொல்லியல்துறை தொடர் எண் : 337/2005

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 25
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 502 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	குலசேகரன்	எண்	: 29

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் இடதுபுறம் (தெற்கில்) உள்ளது.

குறிப்புரை : ஆண்மர் நாட்டு சோழபுரத்து உத்தமசோழ விண்ணகர் ஆழ்வார் கோயிலில் எழுந்தருளிவிக்கப்பட்டிருந்த மன்னார் மற்றும் நாச்சியார் திருமேனிகளுக்கு அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட நித்த நிவந்தங்களின் செலவினங் களுக்காக இறையிலியாக நிலக்கொடை வழங்கப்பட்டிருந்தமையைத் தெரிவிப்பதாகக் காணப்படுகிறது.

கல்வெட்டு :

1. [அருளிச்செயல்] ஆண்மர் நாட்டு சோழபுரத்து உத்தம சோழ விண்ணகர்
2. [ஆழ்வார் கோயில்] நம்பிமார்க்கும் ஸ்ரீவைஷண வர் களுக்கும் இக்கோயிலிலி
3. [ல் எழுந்தரு] ளுவித்த மன்னனார்க்கும் நாச்சியார் [க்கும்] ஸ்ரீ கோமாறபன்மர
4. [ரனதிரிபுவ]னச் சக்கரவத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீகுல
5.[சேகர தேவர்] க்கு யாண்டு உயரு வது சித்திரை மாஸம் முதல் அமுதுபடி சா
6.[த்துப்படி உ] ள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு இவ்வூர் நம் உழ
7........ மங்கலத்தில் இவர்க்கு திருவிடையாட்ட இறையிலியாகக் குடு
8........ டிக் கோலால் நடுவில் கொட்டகாரத்துக்குத் தெற்கு வெண்
9......... இச் கொட்டக் காரத்துக்கு மேற்குச் சுமை தாங்கிக் கிணறு.
10.......... க் கிணறு இரண்டு உட்பட நிலம் ஒரு வேலி
11...........டு.........முடைய.....யிலே காராண்மை உடலாக தன்மதான
12........... க்க குடுத்தோம் இப்படி இவ்வோலை பிடி பாடாகக் கொண்டு.
13. கல்லுவிதாக நான்கெல்லையிலும் திருவாழிக்கல்லும் நாட்டி.
14. [கல்லிலும் செ] ம் பிலும் வெட்டிக் கொள்க இப்படிக்கு இவை முத்தூற்றுக் கூற்ற
15. த்து...... நான ஒலகளந்த சோழநல்லூர் அழகன் சொக்கனார் எழுத்து இவை
16. [வ] .... நாச்சியார் [எழு] த்த தாமோதிரன் துப்பனான் குலசேகர வி [முப்பரையன்]

17. [எழு] த்து இப்படிக்கு இவை ராசேந்திர சோழ வள நாட்டு... தாரங்குடை.

18...... லமுது தேவச்சிலையானான மீனவன் விழுப்பரையன் எழுத்து இப்ப

19. [டிக்கிவை] செம்பினாட்டு கீரனூரான் உய்யவந்தான் உய்யநின்றாடுவான் குருகுல

20. [ராயன் எ] ழுத்து இப்படிக்கு இவை மிழலைக் கூற்றத்து நடுவில் கூற்று வி

21........... ல்லூர் உடையான் யோகப் பெருமான் சொக்கனாரான

22............ ன் எழுத்து இப்படிக்கிவை கீழ்ச் செம்பி நாட்டு த.....

23. .... யன் கலியனான காலிங்கரையன் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 338/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	:	
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:	1868
ஊர்		சோழபுரம்	இந்தியக் கல்வெட்டு		
			ஆண்டு அறிக்கை	:	
மொழி	:	தமிழ் + ஆங்கிலம்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ் + ஆங்கிலம்			
அரசு	:	ஆங்கிலேயர்	ஊர்க்கல்வெட்டு		
அரசன்	:		எண்	: 30	

இடம் : சோழபுரம் விக்கிரம பாண்டீச் சுரமுடையார் கோயில் அலுகிலுள்ள பாலம்.

குறிப்புரை : பாலம் கல்வெட்டு இதனை அமைத்த பொறியாளரின் பெயரும் பணி செய்து முடிக்கப்பட்ட ஆண்டும் (கி.பி.1868) பொறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1. இந்தப் பாலமும்
2. அதின் றோட்டும்
3. கவர்ண்மெண்டு சிலவு செய்து
4. சப் இஞ்சிணீர் மேஸ்தர்
5. மக்கனீர் துரையவர்களால்
6. ௲ அள சாய அ
7. முடிப்பிவிக்கப்பட்டது.

ஆங்கிலம்

1. THIS BRIDGE
2. AND ITS APPROACHES WERE
3. CONSTRUCTED AT THE GOVERNMENT
4. EXPENSE UNDER SUPERINTENDENT
5. OF MED MANAGER SUB ENGINEER
6. IN THIS YEAR
7. 1868

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 34
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 13 ஆம் நூ.ஆ.
ஊர்		முதுகுடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	: 502 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு எண்	: 1
அரசன்	:	குலசேகரன்		

இடம் : இராசபாளையத்திற்கு தெற்கேயுள்ள முதுகுடி என்ற சிற்றூரின் நடுவில் உள்ளது.

குறிப்புரை : இவ்வூரிலுள்ள கருங்குளம் என்ற பெரிய குளத்தில் உடைப்பு ஏற்பட்டபோது அவ்வுடைப்பை சரிசெய்யும் முயற்சியில் ஈடுபட்டு இறந்த குடும்பர் இனத்தவரான பெரியதேவ பள்ளன் என்பவருக்காக விடப்பட் உதிரப்பட்டி நிலம் பற்றிய செய்தியினைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. குலை சேகர தேவ
3. ர்க்கு யாண்டு ௩௪ வ
4. து கருங்குளத்திர்க்
5. கு ஒரு பழி உண்
6. டான படியாலே
7. இப்படிக்கு இவ்வூர்
8. குடும்பரில் பெரிய
9. தேவப் பள்ளன் அணை
10. வெட்டிப் போகையா
11. லே இவன் மகளுக்கு
12. ஊரார்களிட்ட உதி
13. ரப்பட்டி குடுத்தபடி தபான
14. வ நிலம் அரைமா அரை
15. நிலம் சந்திராதித்தவல்
16. மானிய மாயனுவப்பார்
17. களாக [ஸ்வஸ்திஸ்ரீ]

த.நா.அ. தொல்லியல்துறை தொடர் எண் : 340/2005

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 6
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1297
ஊர்		இராசபாளையம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 503 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	ஸ்ரீவல்லபன்	எண்	: 1
இடம்	:	பறவை அண்ணம் காத்தார் திருக்கோயில் தெற்குச் சுவர்		
குறிப்புரை	:	இடையிடையே சிதைந்து காணப்படுகின்றது. இக்கோயில் இறைவர்க்கு ஒரு நந்தாவிளக்கு முட்டாமல் எரிப்பதற்குத் தானம் வழங்கப்பட்டுள்ளது. அந் நந்தா விளக்கு எரிக்கத் தவறும் பட்சத்தில் இரண்டு நந்தாவிளக்கு எரிப்பதாகவும் தண்டமாக ஒரு பணமும் தரச் சம்மதித்த செய்தியினைத் தெரிவிக்கின்றது.		

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ வல்லப தேவற்கு யாண்டு ௬ வது மேஷ நாயற்று பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற உத்திராட்டாதி நாள் வடவெல்லைத் திருக்கை இ.............. வெண்பைக்குடி நாட்டுக் கருங்குளமான சாதவாசக நல்லூர் உடையார்.

2. கோயில் முப்பது வட்டத்தில் சிவ ப்ராஹ்மணரில் தேவப்பெரு மாளான.... காயனும்... தம்பிஸ்ரீ சாதவாசக பட்டனும்.... ஆண்டான் ஆட்கொண்ட...... ட் கொண்ட நாயக பட்டனும்.... சொக்கன் திருமலை வண்ண சொக்க பட்டனும்..... யான பரமேசுர பட்டனும் இவனை வோமும் பிடிபாடு கல்லில் வெட்டிக் குடத்த படியா.....

3. னாற்கு இடுவதாக திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு முப்பதுக்கு மாதமொன்றுக்கு ஒன்றரைக்கும் இந்நாள் முதல் சந்திராதித்தவரை.... விளக்கொன்றும் எரித்து போதுவோமாகவும் இத்திருநந்தாவிளக்கு பூ.....படி.....னற்கு இரண்டு நந்தாவிளக்கு மெரித்து தண்டம் ஒரு பணமுங் குடுப்போ மாகவும் இப்படி சம்மதித்து பிடிபாடு க

4. ல் வெட்டிக் குடுத்தோம் பெரியாற்கு இவ்வனைவோமும் இவை.... எழுத்து.. இவை சாதவாசக பட்டன் எழுத்து இவை ஆரி நாட்டுத் தொண்டை நாயக பட்டன் எழு[த்து] இவை சொ [க்கன் எழுத்து]

இந்த தன்மரக்ஷிப்பாற்கு.... அவர்கள் சரணங்களிரண்டும் என் தலை மேலன.

த.நா.அ. தொல்லியல்துறை தொடர் எண் : 341/2005

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 11
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1248
ஊர்		இராசபாளையம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 504 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	இரண்டாம் சுந்தரபாண்டியன்	எண்	: 2
இடம்	:	பறவை அண்ணம் காத்தார் திருக்கோயில் கிழக்குச் சுவர்		
குறிப்புரை	:	மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில் எனக்கு நல்லபெருமாள் மடத்திற்கும் திருவாரூர் கோளகி மடத்து ஆசாரியர் அவர்கள் சிஷ்யர் மற்றும் அவர்கள் வர்க்கத் தாருக்கும் உணவு மற்றும் தேவைக்களுக்காக எனக்கு நல்லபெருமாள் பேரால் விடப்பட்ட நிலத்தானத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நிலத்தில் எப்பயிரும் விளைவித்துக் கொள்ளவும் அவற்றால் வந்த வரிமுதலானவைகளும் செலவிடப்பட வேண்டிய முறை பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றது.		

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமலர் திருவும் பொரு செய மடந்தையு தாமரைக் குவிமுலைச் சேர்ப்புயத் திருப்ப வேதநாவில் வெள்ளி தட்டாமரைக் காதல்மாது கவின் பெறத்திளை

2. ப்ப வெண்டிரையுடுத்த மண்டிணி தாக்கைத் திரு நிலமடந்தை யுரிமையிற் களிப்பச் சமையமு நிதியமுந் தருமமுந்த தழைப்ப யிமையவர் விழாக் கொடியிடந் தோறு மெடுப்பக் கரு [ங்கலி கனல்கெடக்]

3. [கடவுள் வேதிய] ரருந் தொழில் வேழ்விச் செங்கனல் வளரச் சுருதியுந் தமிழுஞ் சொல் வளங் குலவப் பொருதிறவாழி பூதலஞ் சூழ்தர ஒரு கை யிருசெவி மும்மத நாற் கோட்டயிராவத முதல்

4. செய்திக் கொற்றத் தெண்டிசை யானை யெருத்த மேறிக் கண்டநாடெ தெனக் கயல்களி கூரக் கோசலந் துளுவங் கொங்கிரங் குச்சரம் போசளமக

5. தம் பொப்பளம் புண்டரங் கலிங்கமீழ கடாரங் கௌடந் தெலிங்கஞ் சோனகஞ் சீனக முதலாய விதிமுறை திகழ வெவ்வேறு வகுத்த முதுநிலக்கிழமையில் முடிபுனை வே

6. ந்தற் கொருதனி நாகனென்று ல கேத்தத் திருமுடிசூடீச் செங்கோலோச்சிக் கொற்றத் தரளக் குளிர்குடை நிழற் கீழ்க் கற்றைக் கவரிகாவலர் வீச விடுகதிர் நவமணி வீரஸிംஹாஸனத்துடன் முடி சூடி யுயர் குலத் திருவென்

7. மதுமலற் கரங்குவித்துப் பாத்திபர் [வர] மங்கையர் திரண்டு வணங்குஞ் சென்னியில்ச் சுடரொளி மௌலியிற் சுடர்மணி மேலிடச் சிவந்த இணைமலர் சீறடிக் கமல மதுகரங் கமலமென்றணுகும் உலகமுழுதுடை

8. [யாளொடும் வீற்றி] ருந்தருளிய மா முதல் மதிக்குலம் விளக்கிய கோமுதற் கோமாற பன்மரான

[திரிபுவ]னச் சக்கரவத்திகள் ஸ்ரீஸுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு பதினொன்று நாள் ஐந்நூற்றுத் தொண்ணூற்றினால்

9. மாடக் குளக்கீழ் மதுரைக் கோயில்ப் பள்ளியறைப் கூடத்து பள்ளிப் பீட மழவராயனில் எழுந்தருளியிருந்து வெண்பைக் குடி நாட்டுக் கருங்குளமான சாதவாசக நல்லூற் பாவனங் களி

10. ல் கீழைத் திருவாசலுக்குந் தென்கிழக்காக செய்வித்த எனக்கு நல்ல பெருமாள் மடத்து வதிக்கும் திருவாரூர் க்ஷேத்ர கோளகி மடத்து ஆசாரியர் ஸிஷ்யரில் ஈசான தேவரும் அவர் சந்தானத்துத் தபஸ்யர்

11. ரில்.... தருளினபடி இவற்கும் இவர் ஸந்தானத்து தபஸ்யர்க்கும் ஹோஜனம் உள்ளிட்டு வேண்டுவனவுக்கு ராஜவல்லிபுரத்து ஒருவாறு உணர்ந்த எனக்கு நல்ல பெருமாளான தமிழ்ப்பல்லவரையர் பேரால் செய்வித்த

12... வெண்பைக் குடி நாட்டுக் கருங்குளமானச் சாதவாசக நல்லூர் மேபால் கருங்குளத்தில் காணியான மூன்றாங் கண்ணாற்று நாச்சி வாயக்கல் தடி ஒன்று நிலம் முக்காணி முந்

13. [திரிகை]... லும் இதன் கிழக்குத் தடி ஒன்று நிலம் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரை யேயரைக்காலும் இதன் வடக்குத் தடி நாலு நிலம் காணியரைக் காணி கீழ்ரைக்காலும் ஆறாங் கண்ணாற்றுத் தடி ஒன்று நிலம்

14. [காணியரைக் காணிக்கீழ் முக்கா] லும் கங்கன் வாய்க்கல் தடி ஒன்று நிலம் முக்காணியரைக் காணி முந்திரிகைக் கீழேழுமா வரையும் ஆக நிலம் மூன்று மா முந்திரிகைக் கீழரையும் இவ்வூர் வடபால் ஆதியூற் குளத்தில் இரண்டாங்கண்ணாற்றுத் தேவன்

15...... ஒருமா முந்திரிகைக் கீழ் முக்காலே மாகாணி யும் மூன்றாங் கண்ணாற்று யாதவராயன் செய்க்கு வடகிழக்குத் தடி இரண்டு நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலும் இதன் மேற்குத் தடி இர

16. ண்டு மா முந்திரிகைக் கீழரைக்காலும் இதன் வடக்குத் தடி மூன்று நிலம் அரைக்காணிக் கீழரையே யரைக்காலும் புளி க்குக் கிழக்கு வயக்காலுக்குத் தெற்குத் தடி ஒன்று நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் மாகா

17....... காணிக் கீழெழுமா வரையும் இவ்வூர் மேல்பால் புதுக்குளத்து முதற்கண்ணாற்று ஆணையாண்டான் தடிக்குத் தென்கிழக்குக் கருங்குளத்துக்கு நீர் பாய்கிற காலுக்குக் கிழக்கு செம்மோடி வாய்க்காலுக்கு மேற்கும் தடி பல

18. [விட்டு] .... லும் ஆக நிலம் அரையும் கற்கயத்துப் பற்றி ஆற்றுக்குத் தெற்குத்தோட்ட நிலம் இரண்டு மாவும் ஆக நிலம் அரையே யிரண்டு மாவும் பதினோராவதின் எதிராமாண்டு முதல் முதல் மடப்புற யிறையலியாயிறுப்பதா கவும் இறுக்குமிடத்து

19......முதருதான அச்சும் காரியவராட்சியம் வெட்டிப்பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரகப் பேறும் வாசல் பேறும் இலாஞ்சினைப்பேறும் பொன்வரியும் மற்றும் எப்பேற்பட்டனவும் உட்பட மாத்தால் காசு காலும் பயி

20... மாத்தால் இவ்வூற கடமையிறுக்குங் காலால் நெல்லு அறுகலமும் குருவை விளைந்த நிலத்துக்கு இவ்வரிசையில் ஒன்று முக்காலும் அற்பசிக்கு குறுவை விளைந்த நிலத்துக்கு ஒன்று பாதியும் துலா

21. ..... ஒன்று காலும் எள் வரகு தினைப்புல்லு இறுங்கு விளைந்த நிலத்துக்கு மாத்தால்திரமம் இரண்டும் ஆக இவ்வாண்டு முதல் இறுப்பதாக இறைகட்டப்பெற வேணுமென்று ஐய்யன் மழவராயன் நமக்குச் சொன்னமையி

22. ....ரூர் கூஷ்ண மடத்து ஆசாரியர் சிஷ்ரில் எங்கள் தேவரும் இவர் ஸந்தானத்துத் தபஸூற்கும் ஹோஜன முள்ளிட்டு வேண்டு வனக்கு இராஜவல்லபுரத்து ஒருவாறுணர்ந்தான் எனக்கு நல்ல பெருமாளான த....

23....... க்கு வெண்பைக்குடி நாட்டுக் கருங்குளமான சாதவாசக நல்லூர் தேவன் பரசிராமனான பாண்டிய தேவனுக்குச் சாதவாசக நல்லூர் மேல பால் கருங்குளத்தில் காணியான மூன்றாங் கண்ணாற்று நாச்சான் வயக்கல்...

24.... ரரையே அரைக்காலும் இதன்கிழக்குத் தடி ஒன்று நிலம் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரையே யரைக்காலும் இதன் (வகை) க்குத்தடி நாலு நிலம் காணியரைக் காணிக் கீழரைக் காலும் .....ங்... கண்ணாற்றுத்தடி ஒன்று நிலம்

25........ [வ]யக்கல் தடி ஒன்று நிலம் முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழேழுமாவரையும் ஆக நிலம் மூன்று மா முந்திரிகைக் கீழரையும் இவ்வூர் வடபால் ஆதியூர் குளத்தில் இரண்டாங் கண்ணாற்று தேவன் வய்க்கால்

26..... (கீ) ழ் முக்காலே மாகாணியும் மூன்றாங் கண்ணாற்று யாதவராயன் செய்க்கு வட கிழக்குத் தடி இரண்டு நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலும் இதன் மேற்குத் தடி இரண்டு நிலம் காணி அரைக்காணி முந்திரி கீழ்....

27...... ன்று நிலம் அரைக்காணிக் கிழரையே அரைக்காலும் புளிக்குக் கிழக்கு வாய்க்காலுக்குத் தெற்குத் தடி ஒன்று நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் மாகாணியும் ஆக நிலம் இரண்டு மா அரைைக்காணிக் கீழேழுமா....

28...... ளத்து முதற் கண்ணாற்று ஆனையான்டான் தடிக்குத் தென் கிழக்குக் கருங்குளத்துக்கு நீர் பாய்கிற காலுக்குக் கிழக்கும் செம்மோடி வாய்க்காலுக்கு மேற்கு தடி பல நிலம் நாலுமா முக்காணி கீழரைக் காலும்.....

29. ற்றுக்குத் தெற்குத் தோட்ட நிலம் இரண்டு மாவும் ஆக நிலம் அரையே இரண்டு மாவும் பதின் ஒருவதினெதிரா மாண்டு முதல் மடப்புற இறையிலியாக யிறுப்பதாகவும் இறுக்கு மிடத்துக் கடமை

30. [அந்தராயம்].... தருவதான அச்சும் காரிய வாராட்சியும் வெட்டிப் பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரகப் பேறும் வாசல் பேறும் இலாஞ்சினைப்பேறும் பொன்வரியும் மற்றும் எப்பேற்பட்டனவும் உட்பட மாத்தால் காசு

31. லத்துக்குக் கடமை மாத்தால் இவ்வூர்க் கடமையிறுக்குங் காலால் நெல்லு அறுகலமும் குறுவை விளைந்த நிலத்துக்கு இவ்வரிசையில் ஒன்று முக்காலும் அற்பசிக் குறுவை விளைந்த நில

32. .....த்து விளைந்த நிலத்துக்கு ஒன்றுகாலும் எள்வரகு தினைப்புல் இறுங்கு விளைந்த நிலத்துக்கு மாத்தால் திரமம் இரண்டும் ஆக இவ்வாண்டு முதல் இறுப்பதாக நம் வரியிலார் எழுத்திட்ட உள்வரியும் [நங்கேழ்வியும் குடு]

33. க்கச் சொன்னோம் கைக் கொண்டு இப்ப வநாதிதவற் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டி வித்துக் கொள்க வென்று திருவாய் மொழிந்தருளினார் இவை திருமல்லி நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூருடையா

34. ன் சோறனுய்ய நின்றாடு வானான குருகுலத் தரையன் எழுத்து இவை செவ்விருக்கை நாட்டு [சக்கரபாணி] நல்லூர் அரையன் விரத முடித்தானான பல்லவரையனெழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை தொடர் எண் : 342/2005

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 11 + 1
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1249 - 50 ஆம் ஆண்டு
ஊர்		இராசபாளையம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 504 A / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	கோனேரின்மை கொண்டான்	எண்	: 3
இடம்	:	பறவை அண்ணங்காத்தார் திருக்கோயில் கிழக்குச் சுவர்ப்பகுதி		
குறிப்புரை	:	இக்கல்வெட்டும் முன் சொன்னதைப்போல எனக்கு நல்லபெருமாள் பேரால் செய்வித்த நிலத்தானம்பற்றிக் குறிப்பிடுகின்றது. திருவாரூர் கிருஷ்ணகோளகி மடத்தில் உள்ள ஆசாரியர் சிஷ்யர் மற்றும் உள்ளிட்டார்க்கும் அவர்கள் வமிசத்தார்க்கும் இந்நிலம் பயன்படுத்திக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அந்நிலத்தில் பயிர் செய்யும் உரிமையும் மற்ற எல்லாவரிகளும் இத் தானத்திற்காகச் செலவிட வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது.		

கல்வெட்டு

1. கோனேரின்மை கொண்டான் வெண்பைக் குடிநாட்டுக் கருங்குளமான சாதகவாசக நல்லூர் பூவனங்களில் ...... முடையாற் கோயிலிற்.... ழந் திருவாச லுக்குத் தென்கிழக்குள்க்.....

2........ ஒருவாறுணர்ந்தான் [எனக்கு நல்லபெரு]மாளான தமிழ்ப் பல்லவரையன் பேரால் செய்வித்த எனக்கு நல்ல பெருமாள் மடத்து வத்திக்கும் திருவாரூர் க்ருஷ்ணகோளகி மடத்து ஆசாரியர் [ஶிஷ்யரில்]

3. ஈசா [ன தேவரும் அவர்] ஸ ஞானத்து தபஸ்யற்கும் ஹோஜனம் உள்ளிட்டு வேண்டு வனவுக்கு இச் சாதவாசகநல்லூர் தேவன் பரசிராமனான பாண்டிய தேவனுக்கு இவ்வூரில் மேல்பால் கருங்குளத்தில் காணியான

4. வயக்கல் தடி ஒன்று நிலம் முக்காணி முந்திரிகை கீழரையே யரைக்காலும் இதன் கிழக்குத் தடி ஒன்று நிலம் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரையே யரைக்காலும் இதன் வடக்குத் தடி நா

5. லு நிலம் [காணியரைக் காணி கீழரைக்]காலும் ஆறாங் கண்ணாற்றுத் தடி ஒன்று நிலம் காணியரைக் காணிக்கீழ் முக்கா [லும் கங்கன் வயக்கல்] தடி ஒன்று நிலம் முக்காணி யரைக் காணி முந்திரிகைக் கீழேழு

6. [மா வரையும் ஆக நிலம் மூன்று மா முந்திரிகைக் கீழரையும்] இவ்வூர் [வடபால் ஆதியூற்] குளத்தில் [இரண்டாங் கண்ணாற்றுத்] தேவன் ....நிலம் ஒரு மா முந்திரிகைக் கீழ் முக்காலே மாகாணியும் மூன்றாங் கண் ணாற்று.

7.[யாதவராயன் செய்]க்கு வடகிழக்குத் [தடி இரண்டு நிலம்] அரைக் காணி முந்தி [ரிகைக்]

கீழரைக்காலும் இதன் வடகிழக்குத்தடி மூன்று

8.........லும் இதன் வடக்குத் தடி நாலு நிலங்காணி அரைக்காணிக் கீழரைக் காலும் ஆறாங் கண்ணாற்றுத் தடி ஒன்று நிலங்காணியரைக் காணிக் கீழ் முக்காலும் சிங்கள வயக் [கல்தடி ஒன்று நிலம்] முக்

9. காணி அரைக்காணி முந்திரிகைக் கீழேழுமாவ ரையும் ஆக நிலம் மூன்று மாமுந்திரிகைக் கீழரையும் இவ்வூர் வடபாலாதியூற் குளத்தில் இரண்டாங் கண்ணாற்று தேவன் வயக்கல் தடி [ஒன்று நிலம்]..............

10. ந்திரிகைக் கீழ் முக்காலே மாகாணியும் மூன்றாங் கண்ணாற்று யாதவராயன் செய்க்கு வடகிழக்குத்தடி இரண்டு நிலம் அரைக் காணி முந்திரிகைக் கீழ் முக்காலும்

11. இதன் மேற்குத் [தடி] இரண்டு நிலம் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரைக் காலும் இதன் வடகிழக்குத் தடி மூன்று நிலம் அரைக்காணிக் கீழரையே அரைக்காலும் பு [ளிக்]

12. க்குக் கிழக்கு வாய்க்காலுக்குத் தெற்குத்தடி ஒன்று நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் மாகாணியும் ஆக நிலம் இரண்டு மாவரைக் காணிக்கீழேழு மாவரையும் இவ்வூர்....

13.த்து முதற் கண்ணாற்று ஆணையாண்டான் தடிக்குத் தென் கிழக்கு கருங்குளத்துக்கு நீர் பாய்கிற வாய்க்காலுக்குக் கிழக்கும் செம்மோடி வாய்க்காலுக்கு மேற்கு தடி பலவிட்டு நிலம் நாலுமா முக்காணிக் கீழரை [க் காலும்].........

14. யும் கற்கயத்துப்பற்றில் ஆற்றுக்குத் தெற்குத் தோட்ட நிலம் இரண்டு மாவும் ஆக நிலம் அரையே இரண்டுமாவும் பதினொன்றா வதினெதிரா மாண்டு முதல் மடப்புற இறையிலி [யிறுப்பதாகவு] மிறுக்

15. குமிடத்துக் கடமையுமந்த ராயமும் வினியோகமும் தருவதான அச்சுங்காரிய வாட்சியும் வெட்டிப் பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரகப் பேறும் வாசல் [பேறும்] இலாஞ்சினைப் பேறும் பொன் [வரியும்] மற்று மெப்

16. பேற்பட்டனவும் உட்பட மாத்தால் காசு காலும் பயிர் பாற்த்து விளைந்த நிலத்துக்குக் கடமை மாத்தால் இவ்வூர் கடமையிறுக்குங் காலால் நெல்லறு கலமும் குறுவை விளை[ந்த நிலத்துக்கு...]

17. சையால் ஒன்று முக்காலும் அற்பசிக் குறுவை விளைந்த நிலத்துக்கு ஒன்று பாதியும் துலா விறைத்து விளைந்த நிலத்துக்கு ஒன்று காலும் எள்வரகு தினைப் புல்லிருங்கு விளைந்த நிலத்துக்கு [மாத்தால்] திரமமிர

18.ண்டும் ஆக இவ்வாண்டு முதல் இறுப்பதாகவும் இட்ட வரியிலார் எழுத்திட்ட உள்வரியும் நங்கேழ்வியுங் குடுக்கச் சொன்னோம் கைக் கொண்டு இப்படி சந்த்ராதித்யவற் செல்வதா [கக் கல்லிலுஞ் செம்பிலு]

19. ம் வெட்டிக் கொள்க இவை அரும் பொற் கூற்றத்து போக்குளத்துப் பூவான் ஆண்ட பிரான் அழகனான அழகிய பாண்டிய விழுப்பரையன் எழுத்து யாண்டு யக... இவை...

20. ணன் கிரனூற் பொன் பற்றியுடையான் திருப்பூவன முடையான் சுந்தரபாண்டிய தேவனான சுந்தரபாண்டிய வில்லவரையன் எழுத்து இவை செவ்விருக்கை நாட்டுச் சக்கரபாணி [நல்லூர் அரையன்] வி

21. ரத முடித்தானான பல்லவராஜனெழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 343/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 11
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்		இராசபாளையம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 504 B / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	-	எண்	: 4

இடம் : பறவை அண்ணங்காத்தார் திருக்கோயில் கிழக்குச் சுவர்ப்பகுதி

குறிப்புரை : முன் சொன்ன கல்வெட்டுத் தானத்தைத் தொடர ஆண்டு பதினொன்று முதல் ஆணையிடப்பட்டதைத் தெரிவிக்கின்றது.

கல்வெட்டு :

1. யாண்டு யக வது நாள் அந்தரஈய முட்பட்ட இறையிலி இட்டபடிக்கும் இறை கட்டினமைக்கு....[வெண்பைக்]

2. குடி நாட்டுக் கருங்குளமான சாதவாசகநல்லூ [ற் தேவன்] பரசிராமனான பாண்டிய தேவ .....

நாட்டு இராசவல்லி புரத்து ஒரு வாறுணர்ந்தான் எனக்கு [நல்ல பெருமாளான]

3. தமிழ்ப் பல்லவரையன் பேரால் இச் சாதவாசக நல்லூர் பரண்ணங் காற்றீசுவர முடையார் கீழைத் திரு வாசலுக்குத் தென்கிழக்காகச் செய்வித்த எனக்கு நல்ல [பெருமாள்]....

4. த்திக்குந் திருவாரூர் கூ஼ஷகோளகி மடத்து ஆசாரியர் ஶிஷ்஼ரில் ஈசான தேவற்கும் இவர் சஞானத்து தபஸ்஼ற்கும் ஹோஜனம் உள்ளிட்டு வேண்டுவனவுக்கு யகவதினெதி....

5.யும் அந்தராயமும் வினியோகமும் கற்பூரவிலையும் காரிய வாராட்சியும் வெட்டிப் பாட்டமும் பஞ்சுபீலி சந்து விக்கிரகப் பெறும் திருவாசற் பேறும் திருவிலைச் சினைப் பேறும் பொன் [வரியும்]........

6. ப்பட்டனவும் உட்பட மடப்புற யிறையிலியிருப்பதாகவும் பாண்டிய தேவனுக்குச் சாதவாசக நல்லூர் மேல்பால் கருங்குளத்தில் காணியான மூன்றாங் கண்ணாற்று நாச்சான் வயக்கா[ல்]......

7. ன் கிழக்குத் தடி கரு சூ ஶுகூரு -ஙC இதன் வடக்குத்தடிசருஶ- கெூ ஆறாங் கண்ணாற்றுத் தடி கூருஶ- ஶும் சிங்கள வயக்கல்தடி சூஙளுஎசூம் ஆக இவ்வூர் வடபால் ஆ தியூர். . . . .

8. றுத் தேவன் வயக்கால் தடி கருபபதளசூம் மூன்றாங்கண்ணாற்று யாதவராயன் செய்க்கு

வடகிழக்குத்தடி உருஶபநஶும்இதன்தென் மேற்கு தடி உருஶஶ பதஶ ச இதன்வடகீழ். . . . . .

9.. . . .. வாக்காலுக்குத் தெற்குத்தடி கரு - கூபளுகூம் [ஆக ரு]........ம் இவ்வூர் மேல்பால் புதுக்குளத்து முதற்கண்ணாற்று ஆனையாண்டான் தடிக்குத் தென்கிழக்குக் கரு. . . . . .

10. க்குக் கிழக்குச் செம்மோடி (வாய்க்) காலுக்குத் மேற்குத்தடி பலரு சூ ஊகூம் ஆக ரு இக்கற்கயத்துப் பற்றில் ஆற்றுக்குத் தெற்கு தோட்டம் ரு உபம் ஆக ரு இஉப நிலம் 'அரையே இரண்டு...........

11. ல் மடப்புற யிறையிலியா யிறுப்பதாகவும் இறுக்குமிடத்து அந்தராயமும் வினியோகமுங் கற்பூரவிலையும் காரிய வாராட்சியும் வெட்டிப்பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரகப் பேறும் திரு

(விளையாட்டமும்) இலாஞ்சி

12. னைப் பேறும் பொன்வரியும் [மற்று] ம் எப்பேற்பட்டனவும் உட்பட மாத்தால் காசு.... வும் பயிர் பார்த்து விளைந்த நிலத்துக்கு கடமை மாத்தால் .... இவ்வூற் கடமை இறுக்குங் காலால் ஒக....

13. இவ்வரிசையில் ஒன்று முக்காலும் அற்பசிக் குறுவை விளைந்தநிலத்துக்கு ஒன்று பாதியும் துலாவிறைத்து விளைந்த ருக்கு ஒன்று காலும் எள் வரகு தினைப்புல்லிறுக்குங் விளைந்த ருக்கு மல் உம்...இ. ....இ

14. றுப்பதாக இறை கட்டினமைக்கு இவை புரவரி திணைக்கள நாயகம் வட வல்லத் திருக்கை இளான்குடியான இந்திராவதார நல்லூர் சதிரன் திருவனை ஆடைத்தானான வில்லவ தரையன் எ...

15. ள நாயகம் மிழலைத் கூற்றத்து நடுவிற் கூற்று சி பராந்தக நல்லூர் வாணியங்குடையான் அரையன் அழகனான கச்சிராஜனெழுத்து இவை புரவரித் திணைக் கள நாயகம் மிழலைக் கூற்றத்து...

16. எ... பொன்வரியும்.... னெழுத்து இவை புரவரி திணைக்களநாயகம் கேரளசிங்கவள நாட்டு வெளியாற்றூரான கொச்சிகாமணி நல்லூர்.

17. யனெழுத்து இவை வடதலைச் செம்பிநாட்டு நல்லூர்க் குடி....... உடையான் அமரபுயங்கரன் இருணீக்கினான் பொத்தப்பிச் சோழனெழுத்து இவை புரவரித் திணைக்கள நாயகம் வடதலை.... ற்றான்...சு.....

18. கூற்றங் குடையான் சீராளன் படயானான பழந்தீபராய னெழுத்து இவை மிழலை கூற்றத்தக் கீழ்க் கூற்றுத் தச்சனூருடையான் சேவகத் தேவனான வாணாதி ராஜனெழுத்து இவை வடதலைச் [செம்பிநாட்டு]

19. யான அழகிய பாண்டிய நல்லூர்ச் சீவலவன் ஏறுதிருவுடை யானான காலிங்க ராஜனெழுத்து இவை முத்தூற்றுக் கூற்றத்துக் கப்பலூரான உலகளந்த சோழ நல்லூர்க் குப்பை அழகனான முனைய [தரையன்] எழுத்து

20.மு..... நாட்டு ராஜவல்லிபுரத்து ஒருவாறுணர்ந்தான் எனக்கு நல்ல பெருமாளான தமிழ்ப் பல்லவரைய னெழுத்து இவை மிழலைக் கூற்றத்து நடுவிற்கூற்று வாவிலி மங்கலத்துப் பனையூரு [டயானா] ன

21. செய்திராஜனெழுத்து இவை முத்தூற்றுக் கூற்றத்து அந்தனூற் சிலம்பூறுடையான் வா நத்தம் பெருந்தெய்வம் தெய்வப் பெருமாளான வத்தராஜனெழுத்து இவை புரவரி திணைக் [களக்கூ]

22. ற்றத்து நடுவிற் கூற்றுச் சி பராந்தக நல்லூர்ப் புதுக்குடையான் சோலையூர் சுந்தர ராஜனான பழந்தீபராஜனெழுத்து இவை புரவரித் திணைக் கள நாயகம் மிழலைக் [கூற்றத்து].

23. தூருடையான் அரையன்.... எழுத்து.

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 344/2005**

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	:
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்		இராசபாளையம்	இந்தியக் கல்வெட்டு	
			ஆண்டு அறிக்கை	: 505 / 1909
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	-	எண்	: 5

இடம்	:	பறவை அண்ணங்காத்தார் திருக்கோயில் கருவறை நிலைப்படியின் மேல் அமைந்துள்ளது.
குறிப்புரை	:	இக்கோயில் நிலைக்காலையும் வாயிற்படியையும் செய்தளித்தவன் பெயர் குறிப்பிடப்படுகின்றது.

கல்வெட்டு

1. இந்நிலைக் காலும் படியும் வாள்வல்ல பாண்டிய தேவன்
2. தன்மம்

மாவட்டம்	:	விருதுநகர்	ஆட்சி ஆண்டு	: 31
வட்டம்	:	இராசபாளையம்	வரலாற்று ஆண்டு	:
ஊர்		தேவதானம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:
எழுத்து	:	தமிழ்		
அரசு	:	பாண்டியர்	ஊர்க்கல்வெட்டு	
அரசன்	:	ஸ்ரீவல்லப தேவர்	எண்	: 1
இடம்	:	நச்சாடை தவிர்த்தருளிய நாயனார் திருக்கோயில் கருவறை மேற்குச் சுவர்		
குறிப்புரை	:	இம்மன்னன் வாசுதேவ நல்லூரில் எழுத்து மண்டபத்தில் இருந்து கொண்டு தாம் பிறந்த நாளுக்கு தேவதானம் கோயில் தானத்தார் வசம் கொடுத்ததானம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இத்தானங்கள் இரண்டாவதின் எதிர் இருபத்தெட்டாவது ஆண்டு முதலாகத் தந்ததைக் குறிப்பிடுகின்றது.		

கல்வெட்டு

1. *ஸமஸ்த* *ஸ்வஸ்திஸ்ரீ* கோமாற பண்மரான *தி*ரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீவல்லபதேவற்கு யாண்டு முப்பத்தொன்றாவது ரிஷப நாயற்று இருபத்தாறாந்தி

2.யதியும் *சுக்ல* பக்ஷத்து பிரதமையும் வெள்ளிக் கிழமையும் பெற்ற நம்முடைய பிறந்தநாளான பூரட்டாதிநாள் ஆரி நாட்டு வாது தேவ நல்லூரில் நம்முடைய எழுத்து மண்ட

3. பத்திலிருந்து நாம் கற்பித்த காரியம் ஆன்மர் நாட்டு செம்மரமான குலசேகர புரத்து உடையார் பகவான் பாறை ஆளுடைய நாயனார் கோயிலில் தானத்தார்க்கு இந் நாயனார்க்கு நாம் கற்பித்

